தீர்க்கதரிசி

மூலம் :
கலீல் ஜிப்ரான்

தமிழாக்கம்
டாக்டர் பா. நடராஜன், எம்.ஏ., டி.லிட்.
[பொருளாதாரப் பேரறிஞர்]

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1956.

விலை ரூ. 1–8–0

சாந்தி பிரஸ், சென்னை-1

பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களின்

அணிந்துரை

நமது நாட்டு ரவீந்திரநாத தாகூரைப் போலவே அரபு ஆசிரியராகிய கலீல் ஜிப்ரான் என்பவரும் அறிவுடன் அன்பை வளர்க்கும் ஆத்மீக உண்மைகளை அழகாய் உருவகப்படுத்தி எளிய முறையில் உணர்த்துவதில் கைதேர்ந்தவர் ஆவர்.

அழகும் தெளிவும் கூடிய அவரது நூல்களுள் "தீர்க்க தரிசி" என்ற சிந்தனையாறே முதன்மையிடம் பெற்றதாகும்.

இந்த நூலைப் பொருத்தமான சொற்களைக்கொண்டு திருத்தமான தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ள டாக்டர் பா. நடராஜன் அவர்கள், தமிழ் மக்களுக்கும் உலக ஒற்றுமைக்கும் அரும்பெரும் தொண்டு புரிந்துள்ளார். இந்த முயற்சி அவர் நல்லெண்ணத்தையும், அதன் வெற்றி, அவர் ஆற்றலையும் புலப்படுத்துகின்றன.

எனது பழைய மாணவரும், நீண்டகால நண்பருமாகிய டாக்டர் நடராஜனை மனமார வாழ்த்தி, அவர் இயற்றியுள்ள வழிநூலைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

கி. சுவாமிநாதன்

முன்னுரை

கலீல் ஜிப்ரான் கவிஞன், கலைஞன், ஞானி. 1883-ல் அரபு தேசத்தில் பிறந்தார்; 1931-ல் அமெரிக்க தேசத்தில் இறந்தார். தாய்மொழியில் பல நூற்களைச் செய்தார். அவர் ஓவியங்கள் உலகத் தலைநகரங்கள் பலவற்றின் கண்காட்சிகளில் முதலிடம் பெற்றன. வாழ்வின் இறுதி இருபது ஆண்டுகளில் அமெரிக்கா வில் வாழ நேர்ந்தபோது ஆங்கிலத்தில் எழுதலானார். அவற் றுள் "தீர்க்கதரிசி" என்பது ஒரு சிறந்த நூல். ரவீந்திரநாத தாகூரின் கீதாஞ்சலிக்குப் பின், கீழ்நாட்டின் குரல் இத்தனை அழகாக வேறெந்த நூலுள்ளும் கேட்கப்படவில்லை என்று புகழ் பெற்ற ஒரு மேலைநாட்டுப் புலமை மதிப்பாளர் கூறினார். வற்றாத தெய்வ ஊற்றிலிருந்து ஆன்ம வெள்ளம் பொங்கி வரு வதுபோலிருக்கின்றது, ஜிப்ரான் கருத்துக்கள். மொழி அழகோ அவருக்கே உரியது; இணையற்றது; கம்பீரம் கொண்டது; மேன்மை மிகுந்தது; மொழிபெயர்க்க அரியது. முதனூல் "உரைநடைப்பா" வகையில் அமைந்திருக்கின்றது. இது தமி ழுக்குப் புதியதோர் பிரபந்த வரிசை. நறுமலர் கண்டு காகிதப்பூ செய்ய விழைந்தேன். மணமேது? உயிரேது? வண்ண மேது? நிழலொன்றே பெற்றது. ஆயினும் தமிழார்வம் பற் றித் துணிந்தேன். இருபது மொழிகளில் ஜிப்ரானின் நூற்கள் பெயர்க்கப்பட்டுள்ளன. அவைபெற்ற இன்பம் தமிழும் பெற லாமே.

இம் முயற்சியில் என்னைத் தூண்டியவரும் துணையாய் இருந்தவரும் திரு. கோ. வன்மீகநாத பிள்ளை ஆவர். வ.வெ.சு.

ஐயரின் கம்பராமாயண ஆங்கில மொழிபெயர்ப்பை முற்றுப் பெறச் செய்த இவர், இந்நூலுக்கும் அவ்வாறே உதவினார்கள்.

இந் நூலுக்கு அன்புடன் அரிய முகவுரை அளித்த பேரா சிரியர் கி. சுவாமிநாதன், M.A., அவர்கட்கும், வாழ்க்கைக் குறிப்பு வரைந்துதவிய கெழுதகை நண்பர் எம். முகம்மது கனி, M.A., அவர்கட்கும் என் நன்றி உரியது.

இந் நூலை விரைவொடு அழகுபட வெளியிட முன்வந்த பாரி நிலைய உரிமையாளர் திரு. செல்லப்பா அவர்களுக்கு என் நன்றி.

பா. நடராஜன்

கலீல் ஜிப்ரான் வாழ்க்கைக் குறிப்பு

எம். முகம்மது கனி, M.A.,
[தலைவர், அரசாங்கக் கலைக் கல்லூரி, சென்னை]

ஓவியனும் உயர்ந்த ஆத்மீகக் கவிஞனுமாய் விளங்கிய கலீல் ஜிப்ரான் 1883-ம் ஆண்டு லெபனன் என்ற நாட்டில் பிறந்தார். இவரது மூதாதையர் செல்வமும், பண்பாடும் சிறந்து விளங்கியவர்கள். இவரது தாயின் குடும்பத்தினர் இசைவல்லுநராய் அந்நாட்டிலே புகழ்பெற்றுப் பொலிந்தனர். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது முதுமொழி. வருங்காலத்தே அழியாக் கவிதைகளையும் ஓவியங்களையும் ஆக்கி உலக மக்கள் உள்ளத்தே குடிகொண்ட இக்கவிஞர் பெருந்தகை பாலப் பருவத்திலேயே ஓவியத்திலும், கட்டிடக் கலையிலும், மாதிரி அமைப்புக்களிலும், எழுதும் திறத்திலும் உலையாத ஊக்கமும் ஒழியாத ஆர்வமும் காட்டிவந்தார். எட்டு வயதுச் சிறுவராக ஜிப்ரான் இருந்தபோது இத்தாலிய ஓவிய வல்லுநராய் விளங்கிய லெனார்டோடாவின்ஸியும், மைக்கேல் அஞ்சலோவும் இவரது மனதைக் கவர்ந்தனர். அவர்களது ஓவியங்களும், காவியங்களும் இவர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. வாழ்விலே கலைவளம் பெற்றுச் சிறக்க வழிகாட்டியாய் இவர்கள் அமைந்தனர்.

ஜிப்ரான் பன்னிரண்டாண்டுப் பருவத்தே அமெரிக்கா சென்றார். பின்னர், தம் பதினைந்தாம் வயதில் ஸிரியன் கல்லூரியிலே சேர்ந்தார். நுண்கலைக்கும், இயற்கை எழிலுக்கும் இருப்

பிடமாய் விளங்கும் பாரிஸ் மாநகரத்தே ஓவியக் கலையை ஜிப்ரான் பயின்றார். தமது இளம் பருவத்திலேயே இலக்கிய மலர்கள் அவரது இதயத்தே அரும்பின. பழைய மொழிகளுள் ஒன்றாகிய அரபிய மொழியிலே உரைப்பாட்டு (Prose Poem) ஆக்கி இலக்கியப் பணி புரிந்தார். நாடகங்கள் பலவும் கலீல் ஜிப்ரான் இயற்றினார். அராபிய தேசம் முற்றிலும் அவரது நாடகங்கள் அவரது புகழை வளர்த்தன. சீனதேசத்திலிருந்து ஸ்பெயின் தேசம் வரையிலும் அவரது கலைப்பணி பரவி 'ஜிப்ரானிஸம்' எனும் ஓர் புதிய சொல் வழக்காற்றிலே வரலாயிற்று. அவரது இலக்கியங்கள் ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்கள் பொதிந்து பொலிந்தன. செய்யுள் இலக்கணச் சிறையினுள் அவரது சிந்தனை தேங்கி நின்றுவிடவில்லை. வாழ்வின் மேடு பள்ளங்களை ஊடுருவி விளக்கும் இனிய எளிய புதிய கருத்தோவியங்களாக அவரது கவிதைகள் விளங்கின.

ஜிப்ரான் தமது இருபதாம் வயதிலே தம் கருத்துக்களை வெளியிட ஆங்கில மொழியையே கையாளலானார். "தீர்க்கதரிசி" (Prophet) எனும் இவரது இனிய நூல் மனிதனுக்குத் தன் இனத்தவரோடு உள்ள உறவை ஆராய்கிறது. "தீர்க்கதரிசியின் பூஞ்சோலை" மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது. "தீர்க்கதரிசியின் இறப்பு" என்ற நூல் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள இணைப்பைப் பற்றிப் பேசுகிறது. "ஏசுநாதர் மனிதனின் குமாரன்" என்பது இவரது மற்றோர் இலக்கியப் படைப்பாகும். இந்நூல் தம் காலத்தே வாழ்ந்த பகைவரும் நண்பரும் ஏசுநாதரை உணர்ந்த வகையைத் தெளிவிக்கும் அரியதோர் முயற்சியாகும்.

இளமையிலேயே இலக்கியப் புகழைத் தனதாக்கிக் கொண்ட இக்கவிஞர் பெருமான் தமது 48-ம் வயதில் நியூயார்க்கு நகரிலுள்ள ஸெண்ட் வின்ஸன்று மருத்துவ நிலையத்தே பிணியாளராய்ச் சென்று சேர்ந்தார். நோயால் உடல் நொந்து படுக்கையில் இருந்த காலத்திலும், அவரது இதயமெல்லாம் இலக்கியத்திலும், இறைவனிடத்திலுமே தோய்ந்திருந்தது. அங்கு

அவர் இருந்தபோது நீதிக்கதைகளை எழுதிக் கொண்டிருந்தார். அந்நூல் அவரது மறைவின் பின்னரே வெளிவந்தது.

ஜிப்ரான் உணர்ச்சி தவழும் முகத்தினர். அடக்கமும் வலிமையும் அவர் முகத்தே பொலிந்தன. ஜிப்ரான் ஒழுக்கத்தின் உருவாய் இருந்தார்; ஆனால் அவர் துறவியன்று. எளிமையும், பணிவும், தூய்மையும் அவரது வாழ்வினை அணி செய்தன.

'முன்னோடி', 'நீதிக்கதைகளும் கவிதைகளும்' (1920) 'தீர்க்க தரிசி' (1923), 'மணலும் நுரையும்', 'ஏசுநாதர் மனித குமாரன்' (1928), 'மண்ணுலகத் தெய்வங்கள்' (1931), 'தீர்க்கதரிசியின் பூஞ்சோலை' முதலிய அழியாத அரிய இலக்கியங்களைப் புனைந்து பொன்றாப் புகழைப் பெற்ற கவிஞர் ஜிப்ரான், தம் 48-ம் வயதிலே 1931-ம் ஆண்டு ஏப்ரல் 10-ம் நாள் மண்ணுலகை விட்டு மறைந்தார்.

பொருளடக்கம்

தீர்க்கதரிசி

அல்முஸ்தபா, இறைவன் அருளுக்கும் அன்புக்கும் சிறப்பாக உரித்தாகியவர்; தான் வாழ்ந்த காலத்தின் விடிவெள்ளி போன்றிருந்தவர். பிறந்த நாட்டுக்குத் தன்னை மீண்டும் எடுத்துச் செல்லும் மரக்கலத்தை எதிர்நோக்கி பன்னீராண்டுகள் காத்திருந்து விட்டார்.

பன்னீராம் ஆண்டிலே, ஐயலூலின் ஏழாவது நாளிலே, விளைவு அறுக்கும் நற்றிங்களிலே, நகரின் மதிற்புறத்தே அமைந்த குன்றின் மீதேறிக் கடற்பக்கமாகக் கூர்ந்து நோக்கினார்; மஞ்சுப்படலத்தூடே தன் மரக்கலம் வருவதைக் கண்டார்.

அவர் உள்ளத்தின் கதவுகள் உடனே திறக்கப்பட்டன. கடல் கடந்து அவர் களிப்புப் பறந்து சென்றது. கண்களை மெல்ல மூடினார். ஆன்மாவின் மோன நிலையிலே இறைவனை வணங்கினார்.

ஆனால் குன்றிலிருந்து இழிந்ததும், மனத்திலே சிறியதோர் துன்பம் குடிபுகுவதாயிற்று; எண்ணலானார்:

எங்ஙனம் அமைதியோடு செல்வேன்; எங்ஙனம் வருத்தமின்றிப் பிரிவேன்; எங்ஙனம் உள்ளப் புண்ணேதுமில்லாது இந்நகரை விட்டேகுவேன்.

இந்நகர எல்லையுள் நான் போக்கிய துன்ப நாட்கள் எத்தனை ; தனிமை இரவுகள் எத்தனை ; துன்பத்தினின்றும், தனிமையினின்றும் வருந்தாது விடைபெறுபவன் எவன் ?

இந்தத் தெருக்களிலே நான் சிதறவிட்ட ஆன்மப்பொறிகள் பற்பல ; இந்தக் குன்றுகளிலே புணையில்லாதலையும் என் காதல் மக்கள் பற்பலர். அவர்களையெல்லாம் உள்ளத்திலே ஊனமில்லாது, நெஞ்சிலே பாரம் ஏருது என்ஞல் விட்டுப் போக இயலாதே.

இன்று நான் ஒரு ஆடையையல்ல களைவது; எனது தோலையே என் கைகொண்டு உரிக்கின்றேன்.

ஒரு நினைப்பையன்று என் பின்னே விட்டுச் செல்வது ; பசியாலும் தாகத்தாலும் பக்குவத்தே இனிக்கப்பெற்ற ஒரு உள்ளத்தையே விடுத்துச் செல்கின்றேன்.

ஆயினும் என்ஞல் இனி தாங்க முடியாது.

யாவற்றையும் தன்னிடத்தே அழைக்கும் கடல் மாது என்னையும் அழைக்கின்ருள் ; நானும் புறப்படவேண்டும்.

இரவின் நாழிகைகள் எரியொத்து வெந்து படுவதாயினும் பனியொத்து உறைகின்றன ; பளிங்கொத்து இறுகுகின்றன ; அச்சிலொத்து வார்த்தெடுக்கின்றன.

இங்கிருப்பனவற்றை யெல்லாம் என்னோடு எடுத்துச் செல்ல ஏங்குகின்றேன். ஆனால் எவ்வாறு இயலும் ?

இசையை ஈன்ற நாவையும் இதழையும், இசையால் எடுத்துச் செல்ல இயலாதே. தனித்தே, அது விண்ணின் எல்லையைத் தேடவேண்டும்.

தனித்தே, தன் கூடு இன்றியே வானப்புள் கதிரவனை நோக்கிச் சிறகு விரித்தல் வேண்டும்.

இங்ஙனமாகக் குன்றின் அடிவாரத்து வந்தவர், மீண்டும் கடற்புறம் திரும்பினார்; கப்பல் துறைமுகம் நோக்கி அணுகுவது கண்டார்: முன்னணியில் மாலுமிகள் அணிவகுத்து நின்றனர், தன் தாய் நாட்டு மாந்தர்.

உள்ளம் அவர்கள்பால் கரைந்தது. விளித்துச் சொல்வார் :

என் தொன்மைத் தாயின் மக்காள், அலைப் புரவி மீதூர்ந்து வரும் வீரரே,

எத்தனை முறை என் கனவுகளிலே நீங்கள் பாய்விரித்துப் படகோட்டியிருக்கின்றீர்கள். இப்பொழுது என் நனவிலும் வந்தீர்கள். இந்த நனவே என் கனவினுட் கனவாகும்.

நான் வருவதற்கு ஆயத்தமாயிருக்கின்றேன். என் வேட்கை பரக்கப் பாய்விரித்து, காற்றை எதிர்நோக்கி நிற்கின்றது.

அமைதி நிலவும் இவ்வான எல்லையிலே இன்னும் ஒரே ஒருமுறை உயிர்க்கின்றேன் ; ஒரே ஒரு முறை திரும்பி நோக்குகின்றேன் :

பின் உங்களிடையே வந்து நிற்பேன், மாலுமி களில் மாலுமியாய்.

நீயே, விரிகடலே, மென்துயில் கொள்ளும் என் தாயே, ஆற்றுக்கும் ஊற்றுக்கும் அமைதியும் உரிமையுமாயிருப்பவளே,

இந்த நீரோடை இன்னும் ஒரு முறைதான் வளைந்து பாயும் ; இந்தச் சோலையிலே இன்னும் ஒரு முறைதான் குறையினைப்பாடும்.

பின்னே நான் உன்னிடம் வந்து விடுவேன் ; எல்லையற்ற நீர்ப்பரப்பிலே எல்லையற்ற சிறுதுளி.

என்று சொல்லி அவர் நடக்கவே, தூரத்தே மக்கள் ஆணும் பெண்ணுமாகத் தத்தம் கழனி களையும் பண்ணைகளையும் விட்டு நகரத்தின் தலை வாயில் நோக்கி விரைவது கண்டார்.

தன்னுள்ளே சொல்வார் :

பிரியும் நாள்தான் கூடும் நாளாகுமோ? என் மாலையே என் காலையாயிற்று என்று சொல்லுமாறு நேருமோ?

ஏரை நடுச்சாலில் விட்டு வந்தவனுக்கு ஏது சொல்லப்போகின்றேன்? திராட்சைத் திரிகையை

நிறுத்தி வந்தவனுக்கு யாது சொல்லப்போகின்றேன்?

எனது உள்ளம் கொத்துக் கொத்தாய்க் குலை சாய்ந்து காய்க்குமோ, நான் கொய்து கொய்து வழங்குவதற்கு?

என் அன்பு வற்றாத ஊற்றாய்ச் சுரக்குமோ, அவர்கள் குடமெல்லாம் நிறைந்து மறிய?

வல்லான் தைவர யானும் ஓர் யாழோ; அன்றி அவன் மென்காற்றால் ஊத ஒரு வேய்ங் குழலோ? மோன நிலைகளை நாடுகிறவன் நான், அந்த மோன நிலைகளிலே என்ன பெருஞ்செல்வம் கண்டெடுத்து விட்டேன், அதை உறுதியோடு இனிவேண்டாமென்று கைவிட?

இதுவே எனது விளைவறுக்கும் நாளானால், எந்தக் கழனிகளிலே நான் விதை விதைத்தேன்; மறந்த எந்தப் பருவத்திலே பயிர் செய்தேன்?

இதுவே என் வாழ்வின் விளக்கை உயர்த்தும் நாளானால், அதிலே எரிவது என் சுடரன்று.

எண்ணெயின்றி, இருளூடே என் விளக்கை எடுப்பேன்.

இரவின் காவலன் எண்ணெய் வார்ப்பான்; ஒளியும் கொளுத்துவான்.

இவை அவர் வாய்விட்டுச் சொல்லியவை. சொல்லாது உள்ளத்து இருந்தன எத்தனையோ. பேராழத்து அடி இரகசியங்கள் அவருக்கே சொல்லவொண்ணாதனவாய் இருந்தன.

பின்னே நகரத்துள்ளே அவர் வந்ததும் எல்லோரும் திரண்டு எதிர்கொண்டார்கள். ஒரே குரலில் அனைவரும் அவரை அழைத்தார்கள்.

நகர முதியோர் எழுந்து நின்று சொல்வார்:

எங்களை விட்டுப் போகவேண்டாம். எங்கள் அந்தி மயக்கிலே ஒரு உச்சிப் பொழுதாய் நின்றீர்; உம் இளமை நாங்கள் காண ஒரு கனவாய் அமைந்தது.

நீங்கள் எமக்கு அயலாரன்று; விருந்தினருமன்று; எம்மகன், அருமைக் காதற் பிள்ளை.

உங்கள் முகத்தை நினைந்து எங்களை வாடச் செய்யவேண்டாம்.

குருக்களும் குருபத்தினியரும் சொல்வார்கள்:

ஆழியின் அலைகள் நம்மை இனிப் பிரிக்க வேண்டா; எங்களிடையே நீர் வாழ்ந்த நாட்கள் வெறும் நினைவாக வேண்டா.

எங்களிடையே ஒரு தேவாய் இயங்கினீர்; உம் நிழல் எங்கள் முகத்திற்கு ஓர் ஒளியாய் இருந்தது.

நாங்கள் உம்மைப் பெரிதும் காதலித்தோம்; ஆனால் எங்கள் காதல் வாய்ச் சொல்லற்றதாய் இருந்தது. திரைகளால் திரையிடப்பட்டிருந்தது.

ஆயினும் இப்பொழுது உம்மை நோக்கி உரக்க அழைக்கின்றது; உம் முன்னிலையே வெளிப்பட்டு நிற்கின்றது.

இப்படித்தான் தொன்று தொட்டே காதலின் தன்மை இருந்து வருகின்றது; பிரியும் நாளவரை தன் ஆழத்தை அது அறிவதில்லை.

வேறு பலரும் வந்தனர்; மன்றாடினர். அவர் மட்டும் மறுமொழி கூறவில்லை. தலை வணங்குதல் ஒன்றே செய்தார்; அருகு நின்றவர், அவர் கண்களில் நீர்த்துளி பெருகி நெஞ்சிலே உதிரக் கண்டனர்.

பின்னே அவரும் பெருமக்களும் கோயிலின் முன்னே அமைந்த வெளி முற்றத்தை நோக்கிச் சென்றனர்.

திருக்கோயிலுள்ளிருந்து அலமித்திரை என்ற ஒரு மாது நல்லாள் வெளியே வந்தாள். அவள் முக்காலமும் தெரிந்துரைக்க வல்லாள்.

அவளை அவர் அயராத அன்போடு நோக்கினார்; அந்நகரத்துக்கு அவர் வந்த மறுநாளே அவர்

பெருமையை உணர்ந்து நம்பி அணுகியவள் அவளே.

அவரை வரவேற்று அவள் சொல்லுவாள்:

இறைவனின் தீர்க்கதரிசியே, கரையிறந்ததை நாடி உம் கலத்திற்காகப் பன்னெடுங் காலம் சேய்மையை ஆய்ந்து கொண்டிருந்தீர்.

இப்பொழுது உமது கலம் வந்தது. நீரும் போக வேண்டும். உமது சிந்தனைகள் அனைத்தும் தேங்கி நிற்கும் தேயத்தை, உம் பேராவல்களின் உறைவிடத்தை, அடைய ஆழ்ந்து விழைகின்றீர். எங்கள் அன்பு உம்மை நிறுத்தாது. எங்கள் தேவை உம்மைத் தடை செய்யாது.

ஆயினும் நீர் எங்களை விட்டுப் போவதற்குள் ஈதொன்றைக் கேட்கின்றோம்: எங்களுக்கு நல்லுரை பகர்வீராக; நீர் கண்ட உண்மையை நாங்கள் காண, உள்ளம் கொள்ளும்.

அதை நாங்கள் எங்கள் மக்களுக்கு வழங்குவோம்; அவர்கள் தங்கள் மக்களுக்கு வழங்குவார்கள்; அங்ஙனமாக அது என்றுமே அழிந்து படாது நிற்கும்.

உமது தனிமையில் எங்கள் வாழ் நாட்களைக் கண்டு நின்றீர்; உமது நனவில் எங்கள் கனவில் வந்த அழுகையையும் சிரிப்பையும் கேட்டு நின்றீர்.

எனவே இதுகாலே எங்களை எங்களுக்கு எடுத்துக் காட்டும்; பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவே இருப்பனபற்றி நீர் கண்டன அனைத்தும் விளக்கிச் சொல்லும்.

அவரும் மறுமொழி சொல்வார்:

ஆர்ப்பலீச மக்களே! நான் எதைப்பற்றிப் பேச இருக்கிறது; உங்கள் உள்ளத்தே இதுபோதும் இயங்கும் சிந்தனைகளைப்பற்றி யல்லாது.

அன்பு

அப்பொழுது சொல்வாள் அலமித்திரை, அன்பைப் பற்றி எங்களுக்குச் சொல்லுமென்று.

அவர் தலைநிமிர்ந்தார்; அவர்கள்பால் அமைதியொன்று பரவியது. உடனே ஓங்கிய குரலில் கூறுவார் :

அன்பு அழைக்கும்போது அவன் பின்னே செல்லுங்கள் ; செல்லும் வழிகள் செங்குத்தாயினும் கரடு முரடாயினும்.

அவன் சிறகுகள் அணைத்தபோது அதற்கு வயப்படுங்கள்; சிறகின் உள்ளமைந்த வாளன்ன முட்கள் உங்களை வருத்தினும்.

உங்களோடு அவன் உரையாடுங்கால், அவனை நம்புங்கள் ; பூங்காவை வாடைக் காற்று அழிப்பது போல உங்கள் கனவை அவன் குரல் சிதறடிப்பதாயினும்.

ஏனெனில் அன்பு முடிசூட்டி வைப்பது போல உங்களைச் சிலுவையிலும் அறைவான்.

அவன் வளர்ப்பது போலவே உங்களை வெட்டவும் செய்வான்.

வானோக்கி உயர்ந்து ஏறி, எட்டிப்பிடித்து உங்கள் மெல்லிய கிளைகளைப் பரிவொடு எங்ஙனம் தழுவுகிருனோ, அங்ஙனமே உங்கள் வேரா

ழத் திறங்கி மண்ணேடு பற்றிய பிடியைக் குலேக்கவும் செய்கிருன்.

அறுந்த பயிர்த்தாள்களே வாரிக் கட்டுவது போல உங்களேத் தன்பால் அணேக்கின்ருன்.

மணிகள் நீங்க உங்களேப் போரடிக்கின்ருன்.

உங்கள் பதர் நீங்கத் தெளித்தெடுக்கின்ருன்;

தவிடு நீங்கி வெண்மை பெற உங்களேத் தீட்டுகின்ருன்;

மென்மை பெறுவது வரையிலும் உங்களே மாவாய்ப் பிசைகின்ருன்.

பின்னர் இறைவன் தூய விருந்துக்கு ஏற்ற தூய அமுதாய் அமைய, தூய வேள்வி நெருப்பிலே சுடுகின்ருன்.

அன்பு இவையனைத்தையும் உங்கள்பால் செய்கின்ருன், உங்கள் உள்ளத்தின் உண்மையை நீங்கள் உணருமாருக.

அந்த உணர்விலே, வாழ்க்கையின் பேருள்ளத்தின் ஒரு சிறு பகுதியாய் நீங்களும் ஆகிவிட.

அங்ஙனமின்றி அச்சத்தால் அன்பின் அமைதியையும், களிப்பையும் மட்டுமே நாடுவீராகில்,

உங்கள் குறைபாடுகளை மறைத்துக்கொண்டு அன்பின் போரடிக்கும் களத்தினின்றும் போய்விடுவதே நலம்.

சிரித்தும் முற்றச் சிரிக்க முடியாத, அழுதும் முற்ற அழமுடியாத பருவகால வேற்றுமையற்ற உலகத்துள்ளே.

தன்னையன்றி வேறொன்றையும் அன்பு கொடுப்பதில்லை. தன்னையன்றி வேறெங்கிருந்தும் கொள்வதுமில்லை.

அன்பு உடைமை கொள்வதுமில்லை ;

தான் உடைமை யாவதுமில்லை.

அன்பே அன்புக்கு முழுநிறைவு.

நீங்கள் அன்பு செய்யுங்கால் "இறைவன் என்னுள்ளத்தில் உள்ளான்" எனக் கூறுதலினும் "இறைவன் உள்ளத்தில் நான் உள்ளேன்" எனக் கூறுங்கள்.

அன்பின் நெறியை நீங்கள் உங்கள் வழித் திருப்பலாகும் என்று எண்ணவேண்டாம். ஏனெனில் தக்கோர் எனக் கண்டால் அன்பு உங்கள் நெறியைத் திருப்புகின்றது.

தன்னையே அடைவதன்றி அன்புக்குப் பிறிதொரு ஆசையில்லை.

அவ்வாறன்றி அன்புசெய்தும் பிறசில ஆசைகள் வேண்டின் இவைகளே அந்த ஆசைகளாகுக :

உருகி இரவினுக்கு இசைபாடி

ஓடும் ஓடைபோல் அமைய,

அளவிறந்த மென்மையின் துயரை அறிய,

அன்பின் நீர்மையை உணர்ந்து அதனால்

உள்ளம் அடிபட்டுப் புண்ணுற,

விருப்போடும் களிப்போடும் செந்நீர் சிந்த,

சிறகு பெற்ற சிந்தையொடும் விடியற்பொழுது விழித்தெழுந்து, அன்புகனிந்த மற்றுமொரு நாளைப் பெற்றதற்கான நன்றி சொல்ல,

நண்பகலில் ஓய்வு கொண்டு அன்பின் ஆரா வின்பத்தைச் சிந்திக்க ;

மாலையிலே நன்றியுள்ளத்தொடு மனை நோக்கித் திரும்ப ;

பின்னே உங்கள் அன்பினுக் குரியாரை நினைக்கும் நெஞ்சுடனே, இசைபாடி வாழ்த்தும் வாயுடனே துயில.

மண வாழ்க்கை

பின்னே அலமித்திரை மீண்டும் சொல்வாள்:

ஐயனே, மணவாழ்க்கைப்பற்றி எங்களுக்குச் சொல்லும் என்று.

அவரும் சொல்வார்;

நீங்கள் ஒன்றாகப் பிறந்தீர்கள்; என்றும் ஒன்றாகவே இருப்பீர்கள். இறப்பின் வெள்ளைச் சிறகுகள், உங்கள் நாட்களைச் சிதறடிக்கும்போது ஒன்றாக இருப்பீர்கள். அம்மட்டோ, இறைவன் மோன நினைவிலும் ஒன்றாக இருப்பீர்கள்.

ஆயினும் உங்கள் இரண்டற்ற நிலையிலும் சற்றே இடம் விட்டு இருங்கள். விண்ணக மென் காற்று உங்களிடையே நடனம் செய்வதாகுக.

ஒருவரை ஒருவர் காதலியுங்கள், ஆனால் காதலை ஒரு அடிமைத் தளையாக்கி விடாதீர்கள். மாறாக இருவர் உள்ளக் கரைகளின் நடுவே, இயங்கும் கடல்போல் அது இருக்கட்டும்.

ஒருவர் கிண்ணத்தை ஒருவர் நிறையுங்கள்; ஆனால் ஒரே கிண்ணத்திருந்து இருவரும் பருகாதீர்கள்.

ஒருவர் கலத்துக்கு ஒருவர் படையுங்கள்; ஆனால் ஒரே கலத்திலிருந்து இருவரும் அருந்தாதீர்கள்.

பாடுங்கள், கலந்து ஆடுங்கள், களித்து மகிழுங்கள்; ஆனால் அவரவர் தனித்திருங்கள்.

ஒரே இசைப்பண்ணால் துடிப்பினும், யாழின் நரம்புகள் தனித்தே இருக்குமாப்போல.

உங்கள் உள்ளங்களைக் கொடுங்கள், ஆனால் மற்றவரை அடக்கி வைத்து ஆளவல்ல.

உங்கள் உள்ளங்களை அடக்கிவைத்து ஆள்வதென்பது வாழ்வின் கை ஒன்றுக்கே இயன்றது.

சேர்ந்து நில்லுங்கள், ஆயினும் ஒன்றி நில்லாதீர்கள்.

திருக்கோயிலின் தூண்கள் ஒன்றி நிற்பன வல்லவே,

பெருமரங்கள் ஒன்றன் நிழலடியில் ஒன்று வளர்வனவல்லவே.

மக்கட் பேறு

மார்போடு மகவை அணைத்து நின்ற ஒரு மாது மக்கட்பேற்றைப்பற்றி எங்களுக்குச் சொல்லும் என்ருள்.

அவரும் சொல்வார் :

உங்கள் மக்கள் உங்கள் மக்களாகார்.

வாழ்வு வாழ்வை நாடிய நாட்டத்தின் மக்கள் அவர்கள், ஆண்களும் பெண்களும்.

உங்கள் வாயிலாக வருகிருர்கள், ஆனால் உங்களிடமிருந்து வருவதில்லை.

உங்களோடு இருக்கிருர்கள், ஆயினும் உங்களுக்கு உரியவரல்லர்.

உங்கள் அன்பை அவர்களுக்கு அளிக்கலாம், உங்கள் எண்ணங்களை அளிக்கமுடியாது.

ஏனெனில் அவர்களுக்கு அவர்களுக்கான தனி எண்ணங்களுண்டு.

அவர்கள் உடலங்களுக்கு வீடுகளமைக்கலாம் ; ஆன்மாக்களுக்கு அமைக்க இயலாது.

ஏனெனில் அவர்கள் ஆன்மா வருங்கால வீட்டில் குடி வாழ்கின்றது ; அதை நீங்கள் சென்று காண இயலாது, கனவிலும் இயலாது.

அவர்களைப் போலாக நீங்களும் முயலலாம்; ஆனால் உங்களைப் போல அவர்களை ஆக்க முயல வேண்டாம்.

வாழ்வு பின் நோக்கி எதிரேறுவதில்லை; நேற்றைப் பொழுதோடு தங்கி நிற்பதுமில்லை.

உயிர் அம்புகள் உங்கள் மக்கள், அவர் எழுந்து பாயும் விற்கள் நீங்கள்.

எல்லையற்ற அண்டவெளியிலே வில்லாளன் குறி வைக்கின்றான்; அவன் அம்புகள் விரைந்து வெகுதூரம் செல்ல, வன்மை கொண்டு உங்களை வளைக்கின்றான்.

வில்லாளன் கையில் நீங்கள் வளைந்துபடுவது மகிழ்வோடாகுக;

ஏனெனில் விரைந்து செல்லும் அம்பை அவன் விரும்புவதுபோல, நிலையோடிருக்கும் வில்லையும் விரும்புகின்றான்.

ஈகை

பின்னே ஒரு செல்வந்தன் முன் வந்து,

ஈகையைப் பற்றி எங்களுக்குச் சொல்லும் என்றான்.

அவரும் சொல்வார்:

உங்கள் உடைமை எல்லாம் கொடுத்தபோதும் நீங்கள் கொடுப்பது குறைவே.

நீங்கள் உங்களையே கொடுக்கையில்தான் உண்மையிலேயே கொடுக்கின்றீர்கள்.

ஏனெனில் உங்கள் உடைமை என்பதுதான் என்ன? நாளை நமக்குத் தேவைப்படுமே என்று நீங்கள் அச்சத்தால் சேமித்துப் பாதுகாத்து வருவன அன்றி அது வேறுண்டோ?

நாளை; தீர்த்த யாத்திரை செல்லும் பரதேசியின் பின்னே ஓடும் நாய் தான் கண்டெடுத்த எலும்புத் துண்டைக் குறி காண இயலாத பாலை மணலுள் பெருங் கவலையோடு புதைத்துவைக்கின்றதே, நாளை அது என்ன காணப்போகிறது?

தேவையை நினைந்து நடுங்குவதுதான் என்ன, அதுவே தேவை அல்லாது?

உங்கள் ஊற்றுநீர் நிறைந்திருக்கையில் நீங்கள் தாகத்தை நினைந்து நடுங்குவீரேயாகில், அதுவே தணியவொண்ணுத் தாகமாகாதோ ?

பெரிதிருந்தும் சிறிது கொடுப்பவர் பலர் ; அதுவும் பெருமைக்காகக் கொடுக்கின்றனர். அந்த ரங்கத் தூய்மையில்லா அந்தக் கொடை பொலி விழந்து விடுகிறது.

சிறிதிருந்தும் யாவும் கொடுப்பவருண்டு.

இவர்களே வாழ்வில், வாழ்வின் வண்மையில் நம்பிக்கையுடையவர்கள் ; இவர்கள் கருவூலம் என்றும் குறைபடுவதில்லை.

கொடுப்பதை இன்பொடு கொடுப்பவருண்டு; அந்த இன்பமே அவர்கள் பெறும் கைம்மாறு.

கொடுப்பதைத் துன்பொடு கொடுப்பவருண்டு; அந்தத் துன்பமே அவர்களைத் தூய்மை செய்வது.

கொடுப்பதில் துன்பமும் அறியார் ; கொடுப்பதில் இன்பமும் அறியார் ; அல்லதூஉம் அறத்தையும் நாடார் ; இது வன்ன கொடையாளருமுண்டே.

அப்பாலிருக்கும் தாழ்வரையிலே முல்லை தன் நறுமணத்தை வான வெளியில் உயிர்ப்பது போலவும் அவர்கள் கொடுப்பது.

இத்தகையோர் செங்கையே வாயாக இறைவன் பேசுகின்றான் ; இவர்கள் இன்கண் அகத்தூடு உலகை நோக்கிப் புன்முறுவல் அரும்புகின்றான்.

கேட்கக் கொடுப்பது இனிதே; கேளாது அறிந்து கொடுப்பது அதனினும் இனிதே.

வாரிக் கொடுக்கும் வண்மைக் கையினர்க்கு, கொடுப்பதினும் கொள்வோரை நாடிக் காண்பதே பேரின்பம் தருவதாயிருக்கின்றது.

ஈதற்கில்லாது தமக்கென உரித்தாய் காத்தற்கென்று ஒரு பொருளுமுண்டோ ?

உங்கள் பொருளெனப்படுவன வெல்லாம் ஒருநாள் கொடுத்துத்தானே ஆக வேண்டும் ; அவ்வாறாயின் இன்றே கொடுக்கவும் ; கொடுக்கும் பருவகாலம் உங்களதேயாகுக, உங்கள் பின்னோர்க்குப் போய் விடாதாகுக.

நீங்கள் பலகால் சொல்கின்றீர்கள் : " நான் கொடுப்பேன், ஆனால் தகுதியறிந்தே கொடுப்பேன் " என்று.

உங்கள் தோட்டத்தின் பழமரங்கள் அவ்வாறு சொல்வதில்லையே ; உங்கள் மந்தையின் ஆடுகள் அவ்வாறு செய்வதில்லையே.

அவைகள் வழங்குகின்றன, தாம் வாழ வேண்டி. வழங்காதவனுக்கு வாழ்வுமில்லை.

பகலையும் இரவையும் இறைவனிடம் பெறத் தகுதியுடையவன், திட்டமாக உங்களிடமிருந்து மற்றெல்லாப் பொருளையும் பெறத் தகுதியுடையவனே.

வாழ்வுப் பெருங்கடலிலிருந்து பருகத் தகுதியுடையவன், உங்கள் சிற்றோடையிலிருந்து தன் சிறு கலனையும் நிறைத்துக்கொள்ளத் தகுதியுடையவனே.

வேறென்ன தகுதி வேண்டும், கொடுப்பதைக் கொள்ளவேண்டிய மனத்திட்பத்துக்கும் பெரு நம்பிக்கைக்கும் மேலாக? அது மட்டுமோ, 'தவருது பெறுவோம்' என்ற பெருமனமும் அவனிடம் இருக்கின்றதே.

நீங்கள் யார், மனிதர் நெஞ்சைத் திறந்து, மானத்தின் திரையை நீக்கி, அவர் நாண, தகுதியைப் பார்ப்பதற்கு?

முதலில் நீங்கள் கொடுப்பதற்குத் தகுதியுடையோரா, ஈகையின் கருவியாயமைதற்கு உரிமையுடையோரா என்று கண்டறியவும்.

ஏனெனில், உண்மையில் வாழ்வே வாழ்வினுக்கு ஈவது; 'கொடுக்கின்றோம்' என்னும் நீங்கள் வெறும் சாட்சி மாத்திரமே.

கொள்வோரே, நீங்கள் அனைவரும் கொள்வோரே. நன்றி என்று ஒரு சுமையை மேற்கொள்

ளாதீர் ; அது கொடுப்போன் பிடரியிலும் கொள் வோன் பிடரியிலும் நுகத்தடி வைத்துப் பிணிப் பது ஆகும்.

மாருக, ஈந்தாரெடு சேர்ந்து, சிறகு விரித் தன்ன, அவன் கொடைப்பொருட்கள் மீதே உயர்ந்தேறுங்கள்.

ஏனெனில் பெருநன்றி பாராட்டல் அவன் வண்மையை ஐயுறுதலாகும் ; வாரி வழங்கும் பார்மகள் தாயாக, இறைவன் தந்தையாகப் பிறந்த தோன்றலன்றே, வள்ளல் என்பான் ?

துய்த்தல்

பின்னே விடுதி நடத்தும் ஒரு முதியோன் முன் வந்து,

தின்பனவும் பருகுவனவும் பற்றி எங்களுக்குச் சொல்லும் என்றான்.

அவரும் சொல்வார் :

நிலத்தின் நறுமணத்தை யுண்டு, வானச் செடி போன்று ஒளியினைப் பருகி நீங்கள் வாழலாகாதா ?

அவ்வாறில்லாதாகவே, பசி அடங்கக் கொன்றே ஆகவேண்டுமென்றிருந்தால், தாகம் தணியப் புனிற்றிளங் கன்றின் தாய்ப்பாலைப் பறிக்க வேண்டுமென்றிருந்தால், அது ஒரு வேள்வியாக மாறட்டும்.

நாட்டகத்தும் காட்டகத்தும் புனிதமாவன, மாசற்றன ஆகிய எல்லாம் மனிதனுள்ளே இருக்கும் அவற்றினும் மேலான புனிதத்துக்கும் மாசற்றமைக்கும் ஆகுதியாகும் வேள்விச் சாலையாய் உங்கள் விருந்தறை அமைவதாக.

ஒருயிரைச் செகுக்கும்போது உங்களுள்ளே பின் வருமாறு சொல்லிக் கொள்ளுங்கள் :

"எந்த ஆற்றல் உன்னை நான் கொல்லச் செய்ததோ, அந்த ஆற்றலாலே நானும் கொல்லப் படுவேன்; நானும் உணவாக்கப்படுவேன்.

"எந்த நியதி உன்னை என் கையில் கொண்டு சேர்த்ததோ, அந்த நியதி என்னையும் மற்றுமொரு வலிய கையில் கொண்டு சேர்க்கும்.

"உன் இரத்தமும் என் இரத்தமும் வேறல்ல; இரண்டும் வானப்பெருமரத்தை வளர்க்கும் ஒரே சாறுகும்."

ஒரு ஆப்பிள் கனியைப் பல்லால் அதுக்கி நொறுக்கும் பொழுது உங்கள் நெஞ்சொடு சொல்லுங்கள்:

"உன் விதைகள் என் உடலிலே உயிர் பெறுவதாக,

"உன் எதிர்காலத்தின் மொட்டுகள் என் உள்ளத்தே அரும்புவதாக,

"உன் உள்ளமே என் உயிர்ப்பாகுக,

"நாம் ஒன்றுபட்டே பருவகாலந்தொறும் களிப்போமாக."

பழமுதிர் காலத்தே, திராட்சைப் பண்ணை சென்று திரிகைக்காகப் பழம் கொய்கையிலே, உங்கள் மனத்துள்ளே சொல்லுங்கள்:

" நானும் ஒரு திராட்சைப் பண்ணையே, என் கனிகளும் திரிகைக்குக் கொய்யப்படும்,

"புது நறும் மது போலவே நானும் அழியாத கலசங்களுள் பெய்யப்படுவேன்."

குளிர்காலத்தே, திராட்சை மது வடிக்கையிலே, ஒவ்வொரு கிண்ணத்துக்கும் உங்கள் உள்ளத்துள்ளே ஒரு கீதம் இசையுங்கள்.

அந்த கீதத்திலே பழமுதிர்கால நாட்களையும், திராட்சைப் பண்ணையையும், திராட்சைத் திரிகையையும் நினைந்து பாடுங்கள்.

உழைப்பு

பின்னே உழவன் ஒருவன் சொல்வான், உழைப்பைப் பற்றி எங்களுக்குச் சொல்லும் என்று.

அவரும் அதற்கு மறுமொழி சொல்வார் ;

நிலத்தோடும் நிலத்தின் உள்ளத்தோடும் ஒத்து நடக்கவே நீங்கள் உழைக்கின்றீர்கள்.

ஏனெனில் மடிமை என்பது பருவகாலங்களுக்கு வேற்றுளுய் விடுவதாகும்; எல்லையற்றதை நோக்கி எடுப்போடும், பெருமிதப் பணிவோடும் நகர்ந்து செல்லும் வாழ்வின் பவனியிலிருந்து விலகுவதாகும்.

நீங்கள் உழைக்கும்போது ஒரு தீங்குழல் போன்ருகின்றீர்கள் ; அந்தக் குழலூடே பொழுதின் உயிர்ப்பு நுழைந்து இன்னிசையாய் மாறுகின்றது.

அனைத்துலகும் ஒன்றுபட்டு இசைக்கையிலே உங்களுள் எவனே அசைவற்று மௌனப் புல்லாய்க் கிடக்க விரும்புபவன் ?

உழைப்பு ஒரு சாபமென்றும் தொழில் தீவினையின் விளைவென்றுமே, உங்களுக்கு எப்பொழுதும் சொல்லி வந்துள்ளார்கள்.

ஆனால் நான் சொல்லுகின்றேன்:

உழைக்கையிலே நீங்கள் உலகத்தின் பண்டை நெடுங்கனவின் ஒரு பகுதியை நிறைவேற்றியவராவீர்; அந்தக் கனவு என்று பிறந்ததோ, அன்றே உங்களுக்கு உங்கள் பங்கும் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டது.

எனவே உழைப்பொடு ஒத்திசைந்து நடக்கையிலே, உண்மையில் நீங்கள் வாழ்வைக் காதலித்தவராகின்றீர்கள்.

அவ்வாருக உழைப்பால் வாழ்வைக் காதலிப்பது, வாழ்வின் ஆழ்ந்த அந்தரங்க இரகசியங்களை நெருங்கித் தெரிந்து கொள்வதாகும்.

ஆனால் உங்கள் துயரத்தில் பிறப்பை ஒரு இடரென்றும், ஊனெடுத்த உடம்பைப் பேணுவது உங்கள் நெற்றி மீது எழுதிய சாபமென்றும் சொல்வீர்களானல், அதற்கு நான் சொல்கின்றேன்: அந்தநெற்றிமீது எழுதியதை அந்த நெற்றி வியர்வையால் மட்டுமே துடைக்க முடியுமென்று.

வாழ்வு இருளடைந்ததென்று சொல்லக் கேட்டிருக்கின்றீர்கள். சலித்தவர்கள் இவ்வாறு சொன்னதை நீங்களும் உங்கள் சலிப்பில் திரும்பச் சொல்கின்றீர்கள்.

ஆனல் நான் சொல்கின்றேன்: வாழ்வு இருளடைந்ததுதான், அதிலோர் உள்ளம் இல்லாது போனல்,

ஆனால் அறிவில்லாத இடத்து ஊக்கமும் முழுக் குருடே,

அந்த அறிவும் வெறும் வீணே, உழைப்பில் லாத விடத்து,

அந்த உழைப்பும் ஒரு பாழே, அன்பில்லாத விடத்து.

அவ்வாறு அன்பொடு உழைக்கையில், நீங் கள் உங்களை உங்களோடு, ஒருவரை மற்றவ ரோடு, அனைவரையும் இறைவனோடு பிணிக்கின் றீர்கள்.

அன்பொடு உழைத்தல் என்பது என்ன?

உங்கள் உள்ளத்திருந்தே நூலெடுத்து ஆடை புனைவதாகும், உங்கள் அன்பிற்குரியாரே அவ்வாடையை உடுத்தற்கென்று.

அன்பொடு ஒரு வீடு கட்டியதாகும், உங்கள் அன்பிற்குரியாரே அதில் வாழ்வதற் கென்று.

கனிவோடு விதை விதைத்து, களிப்போடு விளைவறுப்பதாகும், உங்கள் அன்பிற்குரியாரே அவ்விளைவின் பயனைத் துய்த்தற்கென்று.

அது, நீங்கள் புனைவனவற்றூடெல்லாம் உங்கள் ஆன்ம ஆற்றலை உயிர்ப்புச் செய்வ தாகும்.

போற்றுதல் பெற்ற தென்புலத்தா ரெல்லாம் சூழ நின்று உங்களை விழிப்பொடு நோக்குகின்றனர் என்பதை உணர்வதாகும்.

துயிலில் உரையாடுபவர் போல நீங்கள் அடிக்கடி பேசுவதைக் கேட்டிருக்கின்றேன்: "வெண்மைக் கல்லிலே வேலை செய்வோர், அந்தக் கல்லிலே தம் ஆன்மாவைக் காண்கின்றார்கள். நிலத்தை உழுபவரிலும் அவர்கள் மேம்பாடுடையவர்கள்.

"வானவில்லைப் பறித்து ஒரு ஆடை மீது விரிக்கின்றவர், நமது கால்களுக்குச் செருப்பு செய்பவரினும் சிறப்புடையவர்"

ஆனால் நான் சொல்கிறேன், துயிலிலன்று, திறக்கக் கண் விழித்த உச்சி நண்பகற் பொழுதிலே, விண்காற்று சிறு புல்லினங்களைவிட மிகுந்த அன்போடு பெரு மரங்களோடு உரையாடுவதில்லை.

அவ்வாறானால் எவன் ஒருவன் காற்றின் குரலைத் தன் உழைப்பின் வலுவால் இனிய நற்கீதமாக்குகின்றானோ, அவனே பெரியவன்.

உழைப்பெனப்படுவது அன்பின் கண் கொண்ட உருவெடுப்பு.

அவ்வாறானால் அன்பொடு உழைக்கலாற்றாது வெறுப்பொடு உழைப்பீராகில், அதனிலும் அந்த உழைப்பைக் கைவிட்டு கோயில் வாயிலில்

உட்கார்ந்து இன்பத்தொடு உழைப்போரிடம் இரந் துண்பதே மேல்.

வெறுப்பொடு சமைக்கும் உண்டி மிகக் கசப் பாகி விடும் ;.மனிதனின் பசியை முற்றத் தணிக்க வல்லதன்று.

திராட்சையைப் பிழிகையில் முணுமுணுப்பீ ராகில், அந்த முணுமுணுப்பே திராட்சை ரசத்தில் நச்சு வடியக்காணும்.

அரம்பையர் போன்று தெய்வகீதம் பாடினும், அந்தக் கீதத்தில் உங்கள் உள்ளம் பற்றிலதாயின், நீங்கள் பகலின் குரலும் இரவின் குரலும் கேளாத வாறு காதுகளை இறுக அடைத்தவர்களாவீர்.

களிப்பும் துயரும்

பின்னே பெண்ணொருத்தி கேட்பாள், களிப்பைப்பற்றியும் துயரைப் பற்றியும் எங்களுக்குச் சொல்லும் என்று.

அவரும் சொல்லுவார் :

களிப்பெனப் படுவது உங்கள் துயரின் பொய்க்கோலம் நீக்குதலே.

எந்தச் சுனையிலிருந்து உங்கள் சிரிப்பு ஊற்றெடுக்கின்றதோ, அந்தச் சுனையே உங்கள் கண்ணீரால் நிறைவதுமுண்டு; அல்லாது வேறென்னுவது ?

எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாக உங்கள் வாழ்வை அந்தத் துயரம் அகழ்ந்தெடுக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு மிகுதியாக அது களிப்பையும் கொள்ள வல்லதாகின்றது.

எந்தக் கலசத்தில் உங்கள் திராட்சை மது நிறைந்து நிற்கின்றதோ, அந்தக் கலசமே குயவன் சூளையிலும் சுடப்பெறவில்லையோ ?

எந்த இசைக்குழல் உங்களுக்கு ஆன்மசாந்தி அளிக்கின்றதோ, அந்த இசைக்குழல் மரத்திலிருந்து கத்தியால் செதுக்குதலைப் பெறவில்லையோ ?

களிப்பிலே நீங்கள் மிதக்கும்போது உங்கள் உள்ளத்தை ஆழ்ந்து நோக்குங்கள்: அப்பொழுது எது உங்களுக்குத் துயரத்தைத் தந்ததோ, அதுவே இப்பொழுது களிப்பையும் தருவதைக்காண்பீர்கள்.

துயரிலே நீங்கள் அழுந்தும்போதும், அது போலவே உங்கள் உள்ளத்தைப் பாருங்கள்: எதற்காக மகிழ்ந்தீர்களோ, அதற்காகவேதான் இப் பொழுது துயறுருவதையும் தெரிந்து கொள்வீர்கள்.

உங்களில் சிலர் சொல்கின்றீர்கள், 'துயரத்தி லும் களிப்பே மிகுந்தது' என்று; வேறு சிலர் சொல் கின்றீர்கள் 'இல்லை, துயரமே மிகுந்தது' என்று.

ஆனால் நான் சொல்கின்றேன், 'அவை இரண் டும் இணைபிரியாதவை' என்று.

ஒன்ருய் அவை வருகின்றன; ஒன்று உங்க ளோடு விருந்தறையுள் அமர்ந்திருக்கையில், மற்றது படுக்கையறையில் துயின்று கொண்டிருக்கின்றது.

நன்ருகப் பார்க்கும்பொழுது, களிப்பும் துய ரும் துலாக்கோலின் இரு தட்டுகள் போன்று தொங்குவனவே யாகும்

தட்டுகள் வெறுமையான பொழுதுதான் துலாக்கோல் அசைவற்று சமன்பெற நிற்கின்றது.

நிதியாளன் தன் பொன்னையும் வெள்ளியை யும் நிறுக்க உங்களை உயர்த்தும்பொழுது, உங்கள் களிப்பும் துயரமும் உயர்ந்தோ தாழ்ந்தோ ஆகவே வேண்டும்.

மனை

பின்னே ஒரு கொத்தன் முன் வந்து மனைகளைப் பற்றி எங்களுக்குச் சொல்லும் என்ருன்.

அவரும் மறுமொழியாகச் சொல்வார்:

கோட்டை உட்புறத்து வீடொன்று கட்டு முன்னே, காட்டு நடுப்புறத்துப் பொழிலொன்றை உங்கள் கற்பனையால் நாட்டுங்கள்.

மந்தார மாலையிலே மனைநோக்கி அணுகி வருவது போலவே, சுற்றி அலையும் வேளையிலே தனிமையை நோக்கி எல்லையற்ற தொலை செல்லுதல் வேண்டும்.

உங்கள் மனையெனப் படுவது உங்கள் பேருடலமே.

அது பகலின் வெம்மையில் வளர்கின்றது; இரவின் அமைதியில் துயில்கின்றது; அதற்குக் கனவு என்பதும் இல்லாதில்லை; உங்கள் மனை கனவு காண்பதில்லையா? கனவு கண்டு, நகர எல்லையை அகன்று சோலை நடுவும் மலையுச்சிமீதும் போவதில்லையா?

உங்கள் மனைகளையெல்லாம் என் கையால் வாரி அள்ளி, விதை விதைக்கிறவன் போலவே,

காட்டிலும் புல் வெளியிலும் ஏன் தூவி இறைத்து விடலாகாது என்று ஏங்குகின்றேன்.

தாழ்வரைகளெல்லாம் உங்கள் தெருக்களாதலாகாதா? பசும்புற் பாதைகளெல்லாம் உங்கள் கொடி வழிச்சாலைகளாதலாகாதா? அப்பொழுது ஒருவரை ஒருவர் திராட்சைப் பண்ணைகளூடு வந்து காணலாமே; நிலத்தின் நறுமணம் உங்கள் ஆடையில் தோய்ந்து கமழ வரலாமே.

ஆனால் அவை இன்று நடைபெறுவதாயில்லை.

தங்களுக்கெழுந்த அச்சத்திலே உங்கள் முன்னோர் உங்களை மிக நெருங்கக் கூட்டிக் கொண்டனர். அந்த அச்சம் இன்னும் சிலகாலம் நீடிக்கும்; இன்னும் சிலகாலம் நகரத்தின் மதிற்சுவர்கள் உங்கள் மனைகளையும் கழனிகளையும் பிரித்து நிற்கும்.

அஃதிருக்கட்டும், ஆர்ப்பலீச மக்களே! இந்த மனைகளில் நீங்கள் என்ன வைத்திருக்கின்றீர்கள்? என்ன தானிருக்கின்றது, தாளிட்ட கதவு நிறுத்திக் காவல் செய்வதற்கு?

அமைதி, உங்கள் ஆற்றலை வெளிப்படுத்தும் சாந்த உள்ளம், அங்கே உண்டா?

கற்பனை நினைவுகள், மனக் கோபுரத்தின் உச்சியை அளந்து நிற்கும் மின்னொளிர் வளைவுகள் அங்கே உண்டா?

சொல்லுங்கள் நீங்கள், இவைகள் உங்கள் மனைகளில் உண்டோ?

அல்லது வெறும் புலனின்பம், விருந்துபோல் மெல்ல நுழைந்து, விருந்து செய்வோனுகி, இறுதியில் வீட்டின் தலைவனே ஆகிவிடும், அந்தப் புனலின்ப மோகம் மட்டுமேயுண்டா?

ஆம் அஃதொன்றே உண்டு. அது பாகனுகி அங்குரம் கொண்டு உங்களை உங்கள் ஆசைகளின் பொம்மைப் பொருளாக ஆக்குகின்றது.

அதன் கைகள் பட்டுப் போன்றிருப்பினும், உள்ளம் இரும்பாயிருக்கின்றது.

உங்களைத் தாலாட்டி உறங்கவைப்பினும் உங்கள் படுக்கையருகு நின்றே, ஊன் பரவிய உடலின் பெருமையைக் கண்டு எள்ளி நகையாடுகின்றது.

உங்கள் ஆழ்ந்த புலனுணர்வைப் பரிகசிக்கின்றது; "ஓட்டை, உடைசல் கலன்கள் அவை" யென குப்பை மேட்டில் எறிகின்றது.

மெய்யாகவே, இந்த இன்ப மோகம் எனப் படுவது ஆன்ம வேகத்தைப் படுகொலை செய்கின்றது; செய்துவிட்டுச் சுடுகாடு நோக்கிச் சிரித்து நடக்கின்றது.

ஆனுல், அண்டவெளியின் மக்களாகிய நீங்கள், அமைதியில் அமைதியற்றிருக்கும் நீங்கள், வலையிலும் வீழீர்; படியவும் செய்யீர்.

உங்கள் மனை நங்கூரமாயிராது; கொடி மர மாய் நிற்கும்.

புண்ணினை மறைக்கும் மெல்லிய புறத்தோ லாகாது ; கண்ணினைக் காக்கும் இமையேயாகும்.

வாயில்களூடே நுழைய வேண்டி, சிறைகளைச் சேரச் சுருக்கவும் வேண்டியதில்லை ; கூரை தட் டுமே என்று தலைகளைக் குனிய வேண்டுவது மில்லை.

இறந்தோரால் இருந்தோர்க்குச் செய்த கல் லறைகளில் நீங்கள் வாழீர்கள்.

சிறப்பொடு சுதையொளி சுடர்வதேயாயினும், உங்கள் மனை உங்கள் இரகசியத்தை அடக்கி வைக்க வல்லதன்று. உங்கள் மன வேட்கையை இறுக்கி வைக்கவல்லதன்று.

ஏனெனில் கட்டற்றதாய் உங்களுள்ளே இருப்பது வானக மனையில் உறைவதாய் இருக் கின்றது. அந்த வானக மனைக்குக் காலையின் மெல்லிய பனிப் படலமே கதவுகள் ; இரவின் மோனமும் பாட்டுமே சாளரங்கள்.

ஆடை

பின்னே நெய்வோன் வந்து ஆடைகளைப் பற்றி எங்களுக்குக் கூறும் என்றான்.

அவரும் கூறுவார்:

உங்கள் ஆடைகள் உங்கள் அழகின் பெரும் பகுதியை மறைக்கின்றன ; ஆயினும் அழகில்லாத வற்றை மறைப்பதாயில்லை.

உங்கள் அந்தரங்கத்தின் சுதந்திரத்தை நீங் கள் ஆடைகளில் நாடினும், நீங்கள் காண்பதெல் லாம் சேணமும் சங்கிலித் தளையுமே.

சற்றே உங்கள் மேனி தெரியக் காற்றையும் கதிரவனையும் எதிரேற்கலாகாதா ?

ஏனெனில் வாழ்வின் உயிர்ப்பு கதிரொளி யில் இருக்கின்றது. வாழ்வின் கை காற்றலையி லிருக்கின்றது.

உங்களில் சிலர் சொல்கின்றீர்கள் "நாம் உடுத்தும் உடையைப் புனைந்தவன் வாடைக் காற்றே" என்று.

ஆம், நானும் சொல்கின்றேன், வாடைக் காற்றே.

ஆனால் வெட்கமே அவன் தறி ; திண்புயங்களின் நலிவே அவன் நூல்.

அங்ஙனமே அவன் வேலை முடிந்ததும் காட்டகத்தே நகைத்தல் செய்தான்.

நாணம் என்பது கறைப்பட்டோர் கண்வீச்சைக் காக்கும் ஒரு கேடயம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

கறைப்பட்டோர் இல்லாது போனபின், நாணமும் ஒரு தளையாகின்றது ; மனத்தை மாசு படுத்தும் நச்சுக் காற்ருகின்றது.

ஒன்று மறக்கவேண்டாம் ; உங்கள் காலடி தீண்டப்பெற நிலமகள் களிக்கின்ருள் ; உங்கள் மயிர்க்காலொடு விளையாடக் காற்று காதல் கொள்கின்ருன்.

வாங்குவனவும் விற்பனவும்

வணிகன் ஒருவன் அடுத்து வந்து வாங்குவனவும் விற்பனவும் பற்றி எங்களுக்குச் சொல்லும் என்ருன்.

அவரும் மறுமொழியாகச் சொல்வார்:

நிலமகள் உங்களுக்கு விளைவை வழங்குகிருள்; அதை எவ்வாறு அள்ளி உங்கள் கையில் கொள்வதென்பதை அறிந்தால் உங்களுக்குக் குறைவேதுமில்லை.

நில நல்லாள் தரும் நற்பரிசுகளை மாற்றிக் கொள்வதிலேயே நீங்கள் செழிப்படைவீர்கள்; நிம்மதி பெறுவீர்கள்.

ஆயினும் அந்தப் பண்டமாற்றம் அன்பிலும் கனிந்த நீதியிலும் நடைபெற்றிலதேல், சிலரைப் பேராசைக்கும், பலரைப் பசிப்பிணிக்கும் இழுத்துச் சென்றுவிடும்.

சந்தை வெளியிலே, உங்களுள் நிலத்திலும் தோப்பிலும் கடலிலும் உழைப்போர் நெசவாளரையும் வாசனைப் பொருள்களைத் திரட்டுவோரையும் கூடுகையில் –

பூமியின் அதி தேவதையை உங்களிடையே எழுந்தருளி, உங்கள் தராசுகளைத் தூய்மைப் படுத்த வேண்டிக்கொள்ளுங்கள். பண்டங்களை மதிப்புக்கு நேர் மதிப்பிட இருக்கும் நிறைகளை நேரிதாக்கக் கேட்டுக் கொள்ளுங்கள்.

வாய்ப்பேச்சு ஒன்றையே விற்று உங்கள் உழைப்பின் பயனைக் கொள்ள நினைக்கும் வெறுங் கையினரை உங்கள் நடவடிக்கைகளில் கலக்க வொட்டாதீர்கள்.

அத்தகையோருக்குப் பின் வருமாறு சொல் லுங்கள் :

"எங்களோடு கழனிக்கு வாருங்கள். அல் லது எங்கள் உடன்பிறந்தாரொடு கடலுக்குச் சென்று வலையை வீசுங்கள்.

"ஏனெனில் நிலமும் கடலும் எங்களுக்கு வழங்குவது போலவே, உங்களுக்கும் வாரி வழங்கும்."

பின்னே, பாடவல்லாரும், ஆடவல்லாரும், குழல் ஊதவல்லாரும் வரின் அவர்கள் பரிசையும் கொள்வீர்களாக.

ஏனெனில் அவர்களும் கனியும் நறுமணப் பொருளும் திரட்டுவோரே; அவர்கள் கொணர்வது கனவினால் செய்யப்படுவதாயினும் உங்கள் உணர் வுக்கு ஊணும் உடையுமாய் அமையும்.

முடிவாக நீங்கள் சந்தை வெளியை விட்டுப் போகுமுன் வெறுங் கையோடு ஒருவரேனும் போகாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

ஏனெனில், உங்களுள் மிக எளியவராயிருப் போருள் ஒருவரது தேவையாயினும் நிறைவு பெருதவரை, பூமியின் அதிதேவதை தன் காற்றுப் படுக்கையிலே நிம்மதியோடு தூக்கம் கொள்ளாள்.

குற்றமும் தண்டனையும்

பின்னே நகரின் நீதிபதிகளுள் ஒருவர் எழுந்து நின்று, குற்றம் பற்றியும் தண்டனை பற்றி யும் எங்களுக்கு எடுத்துக் கூறும் என்றார்.

அவரும் மறுமொழியாகச் சொல்வார் :

உங்கள் உணர்வு வழிதப்பிக் காற்றின் மீதே செல்லுகையில்தான், நீங்கள் தமியராய் காவ லிழந்து பிறருக்குத் தீங்கிழைக்கின்றீர்கள்; இழைக் குங்கால் உங்களுக்கே இழைத்துக் கொள்கின்றீர் கள்.

அவ்வாறிழைத்த தீங்கிற்காக நீங்கள் அரு ளாளன் வாயில் முன்னே சற்று நேரமேனும் கதவைத் தட்டி, மறுமொழி பெருது காத்து நிற்க வேண்டியவராகின்றீர்கள்.

கடல்போலும், உங்களுக்குள்ளே யிருக்கும் தெய்வப்பகுதி ;

அது என்றுமே கறைபடுவதில்லை ;

காற்றைப்போலும் உங்களுக்குள்ளே இருக் கும் தெய்வப்பகுதி : அது சிறகுடையாரையே மேலுயர்த்துகின்றது ;

அது கதிரவன்போலும் உங்களுக்குள்ளே இருக்கும் தெய்வப் பகுதி ;

அது எலி வளையின் உள்வளைவை அறிவதில்லை; பாம்பின் புற்றை நாடிப் புகுவதில்லை.

ஆயினும், உங்கள் தெய்வப்பகுதி உங்களுள்ளே தனித்தே இருப்பது மில்லை.

மிகு பகுதி உங்களுள்ளே இன்னும் மானிட வடிவத்ததே; பின்னும் மிகுபகுதி மானிட வடிவு பெருது மிருக்கின்றது.

வடிவு பெருதது, குறளாய் தன் விழிப்பையே நாடி, மாயைப் படலத்தோடு துயில் நடை செய்து கொண்டிருக்கின்றது.

உங்களுள்ளே இருக்கும் மனிதனோடு நான் இதுபோது பேச விரும்புகின்றேன்.

ஏனெனில் அவனொருவனே குற்றம் பற்றியும் குற்றத்துக்குரிய தண்டனை பற்றியும் அறிந்தவன்; உங்கள் தெய்வப் பகுதியோ, அல்லது மாயப் படலத்துள் மூடிக் கிடக்கும் குறளுருவோ அறிந்தனவாகா.

நீங்கள் பலமுறை சொல்ல நான் கேட்டிருக்கின்றேன், குற்றமிழைத்தவன் உங்களுள் ஒருவனாக இல்லாதது போலவும், ஏதோ வேற்றுலகத்திருந்து வந்த ஒரு மாற்ருன் போலவும்.

ஆனால் நான் சொல்கின்றேன், உங்கள் ஒவ்வொருவர் அகத்தேயும் உயரத்தின் எல்லை ஒன்று

இருக்கின்றது : எவ்வளவு திண்மையும் தூய்மையும் வாய்ந்த சான்றோனாயினும், அவனுக்கு அந்த உயரத்தின் எல்லைக்கு மேல் ஏறமுடியாது.

அதுபோலவே கீழ் மக்களுக்கும், மனத் திண்மை யில்லாதவர்களுக்கும். உங்கள் அகத்தே இருக்கும் ஆழத்தின் வரம்புக்குக் கீழாக வீழ்ந்து விட முடியாது.

அனைத்து மரத்தினது மோன அறிவுமில்லாது, அதன் ஒரு இலைகூட மஞ்சள் நிறம்பட மாறுவதில்லை.

அது போலவே உங்கள் அனைவரின் கரந்து பட்ட விருப்பமுமில்லாது, குற்றவாளி ஒருவன் குற்றமிழைத்து விடுவதுமில்லை.

பவனிபோல் வரிசையாக உங்களுள்ளே இருக்கும் தெய்வப்பகுதியை நோக்கி ஒன்றாக நடந்து செல்கின்றீர்கள்.

நீங்களே வழியும், வழிப்போக்கரும்.

அங்ஙனமாக, உங்களுள்ளே ஒருவன் வீழும் போது அவன் தன் பின்னே வருவோருக்காக வீழ்கின்றான், தடுக்கும் கல்லுக்கு எச்சரிக்கையாக.

அது மட்டுமா, முன்னே போவோருக்காகவும் வீழ்கின்றான். அவர்கள் உறுதியோடும் விரை

வோடும் அடியெடுத்துச் செல்லினும் தடுக்கும் வழிக்கல்லை எடுத்து எறியாதே செல்லலானார்.

இதையும் கேளுங்கள், அது உங்கள் நெஞ்சுக்குப் பெருஞ்சுமையாகவே இருப்பினும்:

கொலை செய்யப்பட்டவனும் தன் கொலைக்குப் பொறுப்பாளியே.

களவு செய்யப்பட்டவனும் தன் களவுக்குப் பொறுப்பாளியே.

தீயோர் செயலுக்கு நல்லோரும் பொறுப்பே.

பாதகன் பழிச்செயலுக்குக் களங்கமற்றவர் தூய கையும் பொறுப்பே.

உண்மையில் குற்றம் செய்தவன் குற்றம் செய்யப்பட்டவன் கைப்பொருளே, பெரும்பாலும்.

அறவழி நின்றோர், அறம் பிழைத்தோர் என்று உங்களால் மக்களை வேறுபடுத்தலாகாது.

ஏனெனில் கதிரவன் முன்னே அனைவரும் ஒன்றுபட நிற்கின்றார்கள், கறுப்பு இழையும் வெள்ளை இழையும் ஒன்றுபட நெய்யப்பட்டது போல.

கறுப்பு இழை அறுந்துபடும்போது, நெசவுக்காரன் துணி முழுமையும் பார்வையிடுகின்றான்; தறியையும் சோதனை செய்கின்றான்.

உங்களுள் ஒருத்தி சோரம் போயினள் என்று ஒருவன் மனைவியைத் தண்டிக்க நினைந்தால்,

அவள் கணவனின் நெஞ்சையும் தராசிலிட்டுப் பார்க்கட்டும்: அவன் ஆன்மாவையும் அளவு கோலால் அளந்து காணட்டும்.

தீங்கிழைத்தோனைத் தண்டிக்க நினைப்பவர், தீங்கிழைக்கப்பட்டவன் உள்ளத்தையும் ஊடுருவிப் பார்க்கட்டும்.

நீதியின் பெயரால் தண்டிக்கக் கருதி நச்சு மரத்தை வெட்ட நினைந்தோன், அதன் வேர்களையும் அகழ்ந்து பார்க்கட்டும்.

அவ்வாறு பார்ப்பதானால் வேர்கள் நல்லவும் தீயவும், பயன் தருவனவும் பயன் தாராதனவும், அனைத்தும், ஒன்றாக நிலத்தின் ஆழத்தில் பிணைந்து நிற்பதைக் காண்பார்கள்.

எனவே நீதியை நெறிபட வழங்க எண்ணும் நீதிபதிகளே, என்ன நீதி வழங்கப் போகிறீர்கள், உடலிலே உண்மையாளராயிருந்து உணர்விலே கள்வராயிருப்போர்க்கு?

என்ன தண்டனை வழங்கப் போகிறீர்கள், ஊனிலே கொலை செய்வோராயினும் உணர்விலே நாளும் கொலை செய்யப்படுவோரா யிருப்பவர்க்கு?

எனவே வஞ்சிப்பவனும், கொடுமைக்காரனுமாக இருப்பவன் வஞ்சிக்கப்பட்டவனும்

கொடுமை செய்யப்பட்டவனுமாக இருந்தால் அவனை எங்ஙனம் முறை செய்யப் போகிறீர்கள்?

செய்த குற்றங்களைவிட அவற்றை எண்ணி வருந்துவோனை எவ்வாறு தண்டிக்கப் போகின்றீர்கள்?

நீங்கள் அவனைச் சட்டத்தால் தண்டிக்க விரும்புகின்றீர்கள். அவன் நைந்து படுதலே அவனுக்குப் போதிய தண்டனை யாகாதா?

ஆயினும் உங்களால் குற்றமற்ற ஒரு நெஞ்சை வருந்தச் செய்தல் இயலாதே; குற்றமுடையார் நெஞ்சிலிருந்து அத்துன்பத்தைக் குறைத்தலும் ஆகாதே.

வேண்டாது நள்ளிரவிலே அது வெளிப் போகின்றது, மக்கள் விழித்தெழுந்து தம்மையே தாம் கூர்ந்து காண வேண்டி.

நீதியை அறிந்து கொள்ள விழைவோரே! அதை நீங்கள் எங்ஙனம் தெரிந்து கொள்ள முடியும், செயலனைத்தும் ஒளி நிறைவில் காணுக்கால்.

அன்று தான் நிமிர்ந்து நிற்போனும், கீழே வீழ்ந்துபட்டோனும், குறட்பூதப் பகுதியாம் இரவினுக்கும், தெய்வப் பகுதியாம் பகலுக்கும் இடைநடுவேயுள்ள மாலை மயக்கிலே நிற்கும் ஒரே மனிதன்தான் என்பதை உணர்வீர்கள்.

திருக்கோயில் மண்டபத்தின் உயிர்போன்றிருக்கும் சேமக்கல்லும், மண்ணினடியிலுள்ள அடிப்படைக் கல்லினும் உயர்ந்த தாகாதே.

சட்டம்

பின்னர் வழக்கறிஞன் ஒருவன் சொல்வான், எங்களுக்குச் சட்டங்களைப் பற்றிச் சொல்லும் என்று.

அவரும் மறுமொழி பகர்வார் :

சட்டங்கள் இயற்றுவதில் நீங்கள் களிக்கின்றீர்கள்; ஆனால் அவற்றை மீறுவதில் அதனினும் மிக்க களிக்கின்றீர்கள்.

கடற்கரையில் குழந்தைகள் உறுதியான உள்ளத்துடன் மணற்கோபுரங்கள் கட்டுகின்றனர்; பின்னர் சிரித்து அவற்றை அழிக்கின்றனர், அதுபோல.

ஆனால் உங்கள் மணற்கோபுரங்களை நீங்கள் ஆக்கும்பொழுது, கரையிலே மிகுந்த மணலைக் கடல் கொண்டு சேர்க்கிறது. அவற்றை நீங்கள் அழிக்குங்கால், உங்களுடன் சேர்ந்தே இருக்கின்றது.

வாழ்வு ஒரு கடலாக அமையாமல்,

மனிதன் வகுத்த சட்டங்கள் மணற்கோபுரங்கள் ஆகாமல்,

வாழ்வு ஒரு கற்பாறையாய் அமைந்து, சட்டம்

சட்டம் அப்பாறையில் தன்போன்ற உருவங்களை செதுக்க ஒரு சிற்றுளியாய் வாய்ப்போர்க்கு,

என்ன செய்வது ?

நடனமிடுவோரை இகழும் முடவர் என்னுவது ?

தன் நுகத்தையே காதலித்து, கலைமானையும் புள்ளிமானையும் வீணே அலைந்து திரியும் விலங்குகள் என எண்ணும் எருது என்னுவது ?

தனது சட்டையைக் கழற்ற இயலாக் கிழப் பாம்பு, ஏனையோரை நிர்வாணம் என்றும் நாண மற்றவரென்றும் எண்ணுவதை என் செய்வது ?

மணவிருந்துக்கு அதிகாலையிலே வந்து மிதூண் உண்டு களைத்து மீள்வோன், விருந்துகள் எல்லாம் கொடுமை எனவும், விருந்தளிப்போரனை வரும் சட்டத்தை மீறுவோர் எனவும் கூறின் அவனை என்செய்வது ?

இவர்களைப் பற்றி நான் யாது கூறுகேன், இவர்களும் கதிரவனொளியிலேதான் நிற்கின்றனர்: ஆயின் கதிரவன்பால் முதுகைக் காட்டி நிற்கின்றனர் என்றல்லாது ? இவர்களுக்குக் கதிரோன் வேறு என்னுவது, நிழல் விழச் செய்யும் ஒரு பொருளென்றல்லாது ?

இவர்கள் தங்கள் நிழலையே காண்கின்றார்கள். இவர்கள் நிழல்களே இவர்கள் சட்டங்கள்.

சட்டங்களை இவர்கள் உணர்வதாவது யாது, கீழே குனிந்து அவற்றின் நிழலை எழுதிக் குறிப்பதல்லாது?

ஆனால் கதிரவனை நோக்கி நடக்கும் உங்களையோ, மண்ணில் படர்ந்துள்ள எவ்வுருவம் பற்ற வல்லது?

காற்றோடு பயணம் செய்யும் உங்களுக்கு, பருவகாலங்காட்டும் கருவி எந்நெறிசுட்டவல்லது?

எந்த மனிதச் சட்டம் உங்களைக் கட்டுப்படுத்தும், உங்கள் நுகத்தை மட்டும் நீங்கள் அவிழ்த்துக்கொண்டு, மற்று எவன் சிறைவாயிலையும் திறவாதிருந்தால்?

எந்தச் சட்டத்துக்கு நீங்கள் அஞ்சுவீர்கள், நீங்கள் மட்டும் நடனமாடி, மற்றெவன் விலங்கையும் தகர்க்க முயலாவிடத்து?

எவன் உங்களுக்கு நீதி வழங்குபவன், உங்கள் அங்கியை நீங்கள் கிழித்து மற்றவர் பாதையில் போடவில்லையாயின்?

ஆர்ப்பலீச மக்களே, முரசை நீங்கள் முடுக்காது மூடிவைக்கலாம்; ஆனால் வானம்பாடியைப் பாடாதிருக்க ஆணையிட வல்லார் யார்?

விடுதலை

சொற்பொழிவாளர் ஒருவர், எங்களுக்கு விடுதலையைப் பற்றிச் சொல்லும் என்றார்.

அவரும் மறுமொழி பகர்வார் ;

உங்கள் நகர வாயிலிலும் மனைமுற்றத்திலும் நீங்கள் நிலமிசைச் சாய்ந்து உங்கள் விடுதலையை வணங்கக் காண்கின்றேன்,

அடிமைகள் கொடுங்கோலரின் முன்னே பணிந்து, அவன் கொன்றே செய்யினும் அவனை வாழ்த்துதல் போல.

ஆம், ஆலயச் சோலையிலும், அரண்சுவர் நிழலிலும் உங்களிலே மிகச் சுதந்திரம் பெற்றவர்களும், விடுதலையை ஒரு நுகத்தடியாகவும், இறுகிய கைவிலங்காகவும் கொண்டது கண்டுள்ளேன்.

உடனே என் நெஞ்சகத்தே செந்நீர் சொட்டியது.

ஏனெனில் விடுதலைவேட்கையும் உங்களுக்கோர் தளையான பின்னரே, விடுதலையும் ஒரு உயர்ந்த குறிக்கோளாகின்றது. நிறைவு என்ற பேச்சும் நின்ற பின்னரே, நீங்கள் முற்றும் சுதந்திரர் ஆகின்றீர்கள்.

நீங்கள் மெய்யாகச் சுதந்திரர் ஆவது, உங்கள் பகற்கள் கவலையேது மற்றபொழுதன்று ; உங்கள் இரவுகள் ஆசையும் துயரமுமற்ற பொழுதன்று. ஆனால் அவை உங்கள் வாழ்வைச் சுற்றிஅணைத்தும் கூட அவற்றிலும் உயர்ந்து கட்டுப்படாது நீங்கள் பாசமற எழுந்தபோதே.

அவ்வாறாயின் எவ்வாறு நீங்கள் உங்கள் இரவையும் பகலையும் கடந்து மேல் எழப்போகின்றீர்கள்?

நீங்கள் விடுதலை என அழைப்பது இந்தச் சங்கிலிகளில் எல்லாம் வலிமை மிக்கதையே, உங்கள் வாழ்வின் உச்சிப் பொழுதைச் சுற்றிய அதன் தொடர்கள் அறிவின் உதயகாலத்துப் பேரொளியிலே மின்னினும், உங்கள் கண்களைப் பறிப்பினுமே.

நீங்கள் விடுதலை பெறுவதாயின் எதை நீங்கள் துறப்பது, உங்களது தானேயாம் தன்மையில் ஒரு சில பகுதிகளையல்லாது?

நீங்கள் ஒழிக்க விரும்புவது ஓர் முறையற்ற சட்டமாயின், அச்சட்டம் உங்கள் கையாலேயே உங்கள் நெற்றியில் எழுதப்பட்டதாகும்.

அந்தச் சட்டத்தை உங்கள் சட்ட நூற்களை எரிப்பதால் அழித்தலாகாது; நீதிபதிகளின் நெற்றிகளைக் கடல் நீரைச் சொரிந்தே கழுவினும் ஆகாது.

ஒரு கொடுங்கோலனை அரசிருக்கையிலிருந்து அகற்ற வேண்டும் என்பதுண்டாயின், முதலில்

உங்கள் உள்ளத்தே நிறுத்திய அவன் அரசிருக்கை அழிக்கப்பட்டு விட்டதா என்று பாருங்கள்.

ஏனெனில் கொடுங்கோலன் உரிமையாளரை, சான்ருேரை எங்ஙனம் ஆளவல்லவன், அவர்கள் தம் உரிமைக்கோர் கொடுங்கோலின்றி, சான்ருண்மைக்கோர் இழுக்கின்றி ?

வீசி எறியவேண்டியது ஒரு கவலேயாயின், அக் கவலே நீங்களே தேர்ந்து கண்டது; உங்கள் மீது சுமத்தப்பட்டதன்று.

நீங்கள் வெருட்ட விரும்புவது ஒரு அச்சமாயின், அந்த அச்சத்தின் இருக்கை உங்கள் உள்ளமே; அச் சுறுத்துவார் அன்று.

மெய்யாகக் காணுங்கால், யாவுமே உங்கள் முன்னேயே நீக்கமற்ற அரைத் தழுவலிலேயே இயங்குகின்றன; விருப்புற்றனவும் வெருட்சி கொண்டனவும் பேணியனவும், புறக்கணித்தனவும், விரட்டப்பட்டனவும், தப்ப விரும்புவனவும்.

இவை எல்லாம் உங்களுள்ளே விளக்கும் நிழலும்போல இணைப்பாய்த் தொடர்ந்து இயங்குகின்றன.

நிழல் மங்கி மறையும்போது, பின்னே நின்ற விளக்கு மற்ருேர் விளக்கின் நிழலேயாகின்றது.

அவ்வாறே உங்கள் விடுதலே தனது தளேகளே இழக்கும்போது, அதுவே அதனினும் சிறந்ததொரு விடுதலேக்குத் தளேயாய் விடுகின்றது.

அறிவும் உணர்ச்சியும்

பின்னே குருபத்தினி மீண்டும் சொல் வாள்,

அறிவுபற்றியும் உணர்ச்சி பற்றியும் எங்களுக் குச் சொல்லும் என்று.

அவரும் சொல்வார்:

உங்கள் ஆன்மா ஓர் போர்க்களமாய் பலகா லும் அமைகின்றது. அந்தக் களத்தே உங்கள் அறிவும் சித்தமும் உங்கள் உணர்ச்சியையும் வேட்கையையும் எதிர்த்துப் போர் செய்கின்றன.

உங்கள் ஆன்ம அமைதியை அமைப்போனுக நான் இருத்தல் இயலுமா, பிளவுக்கும் போட்டிக் கும் காரணமானவற்றை ஒருமையாய் இன்னிசை யாய் மாற்றி?

ஆனுல் என்னுல் எவ்வாறு இயலும், நீங்களே அமைதியை ஆக்குவோராகாக்கால்? அன்றியே, உங்கள் அனைத்துக் குணங்களுக்குமே அன்ப ராகாக்கால்?

உங்கள் அறிவும் உணர்ச்சியும் உங்கள் ஆன் மாவின் கடற்பயணத்துக்குச் சுக்கானும் பாயு மாகும்;

உங்கள் பாயோ சுக்கானே அறுந்துபடின் நீங்கள் தத்தளிப்பீர்கள்; அல்லாக்கால் கடல் நடுவே பற்றுக்கோடின்றி நிற்பீர்கள்.

ஏனெனில் முழுமையாய் ஆளுமிடத்து அறிவு வெறும் சிறை செய்யும் ஆற்றலே; துணையற்ற விடத்து உணர்ச்சி தன்னையே தானழிக்கும் ஒரு தழலே;

எனவே உங்கள் ஆன்மா உங்கள் அறிவை உணர்ச்சி வரம்புக்கு உயர்த்திச் செல்வதாக, உவந்து பாடல் வேண்டி;

பின்னே அது உங்கள் உணர்ச்சியை அறிவோடு செலுத்துவதாக; உங்கள் உணர்ச்சி நாளும் உயிர்த்தெழுக, வாழ்வினைப் பெற; தன் சாம்பரிலேயே மீண்டும் உயிர்த்தெழும் போனிக்ஸ் புள்ளேபோல.

உங்கள் அறிவையும் உங்கள் உணர்ச்சியையும் உங்கள் மனையகத்தே வரும்அன்பின் இரு விருந்தினராய் நீங்கள் கருத வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

ஒரு விருந்தினரை மற்றைய விருந்தினரினும் மிகுந்து எக்காலும் போற்றுதல் செய்யீர்; ஏனெனில் ஒருவரை மிகுந்து கருதுவோன் இருவரது அன்பையும் நன்றியையுமே இழக்கின்றான்.

குன்றுகளிடையே, ஓங்கி வானையளந்த நெடுமரங்களின் தண்ணிழலில் நீங்கள் இருக்கை

யிலே, சேய்மைக் கழனிகளின் பசும்புல் வெளிகளில் நிலவும் அமைதியிலும் சாந்தத்திலும் நீங்கள் பங்கு கொள்கையிலே, உங்கள் உள்ளம் மோனத்தில் சொல்வதாக: "இறைவன் அறிவிலிருக்கின்றான்" என்று.

அங்ஙனமே, புயலெழுகையிலே, கொடுங் காற்றில் கானகம் அலைப்புறுகையிலே, இடியும் மின்னலும் வானத்தின் பெருமிதத்தை எடுத்து முழக்குகையிலே, உங்கள் உள்ளம் அச்சத்தில் சொல்வதாக: "இறைவன் உணர்ச்சியில் இயங்குகின்றான்" என்று:

அங்ஙனமே இறைவன் பெருவெளியில் நீங்களும் உயிர்ப்பதாலே, இறைவன் கானகத்தில் நீங்களும் ஓர் இலையாவதாலே, நீங்களும் அறிவிலே அமர்ந்து உணர்விலே இயங்குவீராக!

துன்பம்

மேலும் பெண் ஒருத்தி கேட்பாள், எங்களுக்குத் துன்பத்தைப்பற்றிச் சொல்லும் என்று.

அவரும் சொல்வார் :

உங்களுடைய உணர்வை மூடியிருக்கும் ஓடு உடைவதே உங்கள் துன்பமென்பது.

எவ்வண்ணம் பழத்தின் கொட்டை உடைந்தாக வேண்டுமோ, அதன் உள்ளம் கதிரோனின் முன்னிற்பதற்காக — அவ்வண்ணமே நீங்களும் துன்பத்தை நுகர்ந்தாதல் வேண்டும்.

உங்கள் வாழ்வில் நாளும் எழும் அற்புதம் கண்டு வியந்த வண்ணமே உங்கள் உள்ளத்தை நிறுத்த வல்லீராகில், உங்கள் இன்பத்தினும் உங்கள் துன்பம் வியப்பினில் குறைவுபடாததாய் இருக்கும்.

அப்போது உங்கள் நெஞ்சத்தின் பருவ வேறுபாடுகளை நீங்கள் இசைவொடு ஏற்றுக் கொள்ளுவீர்கள். உங்கள் கழனிகளின் மீது மாறி வரும் பருவ காலங்களை ஏற்று வந்ததுபோல.

அப்போது உங்கள் துயரின் கடுங்குளிர் காலத்தை அமைதியொடு காண்பீர்கள் ; அதன் கருத்தையும் அறிவீர்கள்.

உங்களது துன்பம் பெரும்பாலும் நீங்களே தேடிக் கொண்டது; அது உங்கள் உள்ளிருக்கும் மருத்துவன்; உங்கள் ஆன்மாவைக் குணம் செய்யுமோர் மருந்துமாகும்.

எனவே மருத்துவனை நம்புங்கள். அவன் மருந்தை எதிர் பேசாது அமைதியாய் அருந்துங்கள்.

ஏனெனில் அவன் கை தடித்ததாயினும் கரடு முரடாயதாயினும், காண வொண்ணுப் பொருள் ஒன்றின் மென்கரத்தால் அது இயக்கப்படுகின்றது.

அவன் கொணரும் கிண்ணம் உங்கள் இதழைச் சுடினுமே, அது இறைவனும் குலாலனின் புனிதக் கண்ணீரால் நனைந்த மண்ணுல் வனைதல் பெற்றதன்ருே?

கற்பித்தல்

பின்னே ஒரு ஆசிரியர் சொல்வார், கற்பித்தல் பற்றி எங்களுக்குச் சொல்லும் என்று.

அவரும் சொல்வார்.

உங்கள் அறிவின் உதயகாலத்து, அரைத் துயில் நிலையில் முன்னமேயே அடங்கிக் கிடப்பதை யன்றி வேறெதனையும் எம் மனிதனாலும் துலக்க இயலாது.

திருக்கோயிலின் நிழலிலே சீடர்கள் பின் தொடர உலவிவரும் ஞானாசிரியன் கொடுப்பது அவன் அறிவை யன்று, அன்பையும் மெய்ப் பற்றையுமேயாம்.

அவன் பேரறிவாளனாய் இருப்பின் தன் ஞான இல்லத்தே செல்க என உங்களைப் பணிப்பதில்லை, மாறாக உங்கள் மன இல்லத்தின் தலைவாயிலுக்கே அழைத்துச் செல்லுவான்.

வான நூற்புலவன் வானவெளி பற்றி தான் தெளிந்ததை உங்கள்பால் உரைக்கலாம், தன் தெளிவையே உங்களுக்கு அளிக்க இயலாது.

இசைப் புலவன் அகில வெளியிலும் பரந்த இசையை உங்களுக்குப் பாடிக் காட்டலாம்; ஆனால் அந்த இசையினை உணரவல்ல செவியினை

அவனால் அளித்தல் ஆகாது; அந்த இசையினை எதிரொலிக்கும் குரலையும் அளித்தல் இயலாது.

எண்களின் தத்துவஞானம் அறிந்தவன் நிறையும் அளவும் வழங்கும் பெருவெளி பற்றி எடுத்துரைக்கலாம்; ஆனால் அங்கே உங்களை அழைத்துச் செல்ல அவனால் இயலாது.

என்னெனில் ஒருவன் பெற்ற அறிவுக் காட்சி பிறிதொருவனுக்குச் சிறகினை யளிக்க உதவுவ தில்லை.

இறைவனின் ஞானத்தில் உங்களில் ஒவ்வொருவரும் எங்ஙனம் தனித் தனியாக நிற்கின்றீர்களோ, அதுபோலவே இறைவனைப்பற்றிய உங்கள் ஞானத்திலும்; நீங்கள் தனித்தே தனித்தே நின்றாக வேண்டும், அங்ஙனமே இவ் வுலகு பற்றிய ஞானத்தும்.

நட்பு

பின்னே ஒரு இளைஞன் கேட்பான், நட்பு பற்றி எங்களுக்குச் சொல்லும் என்று.

அவரும் மறுமொழி சொல்வார் :

உங்கள் நண்பன் என்போன் உங்கள் குறைகளைக் களைவோன்.

அவனே நீங்கள் அன்புகொண்டு விதை விதைத்து நன்றியொடு விளைவெடுக்கும் உங்கள் கழனியாவான்.

அவனே உங்கள் ஊனும் உறைவிடமும்.

ஏனெனில் நீங்கள் பசியோடு அவனை அடைகின்றீர்கள்; அமைதிக்காக அவனை நாடுகின்றீர்கள்,

உங்கள் நண்பன் தன் கருத்தை மறையாது வெளியிடும்போது, உங்கள் மனத்திலெழும் 'இல்லை' என்பதற்கு அஞ்சவேண்டாம்; 'உண்டு' என்பதை ஒளிக்கவும் வேண்டாம்.

அவன் பேசாதிருக்கும்போதும் உங்கள் உள்ளம் அவன் உள்ளத்துக்குச் செவி சாய்ப்பது நின்றுவிட வேண்டாம்.

ஏனெனில் நட்பில் வாய்ச் சொல்லின்றியே எல்லா எண்ணங்களும், எல்லா ஆசைகளும், எல்லா நம்பிக்கைகளும் முழங்காக் களிப்பொடு பிறக்கின்றன. பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

உங்கள் நண்பனை நீங்கள் பிரியும்போது வருந்தவேண்டா : ஏனெனில் அவனிடத்து எதை நீங்கள் மிக்கு காதலிக்கின்றீர்களோ, அது அவன் இல்லாவிடத்து அதிகத் தெளிவோடு விளங்குகின்றது, மலையேறுபவனுக்குச் சமவெளியிலிருந்து மலை மிகுந்த தெளிவோடு விளங்குவது போல.

நட்பில்மட்டும் வேறெந்த நோக்கமும் இருத்தல் வேண்டா, உணர்ச்சி ஆழ்ந்து வளர்வதென்பதல்லாது.

ஏனெனில் தனது அற்புத அந்தரங்கத்தை வெளியிடுவதல்லாது வேறெதனையும் நாடும் அன்பு அன்பாகாது. பரக்க வீசிய வலையேயாகும். பயனற்றவையே அதில் சிக்குறும்.

உங்கள் உயர்ந்தன அனைத்தும் உங்கள் நண்பர்க்காகுக!

உங்கள் தாழ்வை அவன் அறியவேண்டுவதானால் வாழ்வையும் அறியட்டும்.

காலத்தைக் கொல்ல நினைந்தே நண்பனை நாடுவதானால் அதுவும் ஒரு நட்பாமோ ?

காலத்தொடு வாழ்வே அவனை என்றும் நாடுங்கள்.

ஏனெனில் உங்கள் குறைவை நிரப்புவதே அவன் கடன். உங்கள் வெறுமையை நிரப்புவதன்று.

நட்பின் இனிமையில் களிப்பு பொங்குக : இன்பங்களைக் கலந்து நுகர்க.

சிறு புல்லின் பனித் துளியிலே இதயம் தனது உதயம் கண்டு எழுச்சி பெறுகின்றது.

அறிவு

பின்னே ஒருவன் கேட்பான், எங்களுக்கு ஆன்ம அறிவைப்பற்றிச் சொல்லும் என்று.

அவரும் சொல்வார்:

இரவு பகல்களின் இரகசியங்களை உங்கள் நெஞ்சம் மோனத்தில் அறிகின்றது.

ஆயினும் உங்கள் செவிகள் உங்கள் அறிவொலிக்கு ஏங்குகின்றன.

எண்ணத்திலே என்றும் உணர்ந்துள்ளதைச் சொல்லால் அறிய அவாவுறுகின்றீர்.

உங்கள் கனவிலே கண்ட ஆடை யுடலை உங்கள் கை விரல்களால் தொட்டுணர விரும்புகின்றீர்கள்.

அவ்வாறே செய்வதும் நன்றே.

உங்கள் ஆன்ம ஆழத்தே மறைந்து கிடக்கும் ஊற்றுக்கேணி பொங்கியெழுந்து சலசலத்துக் கடலை நோக்கி விரைதலே வேண்டும்.

அப்பொழுது உங்கள் உள்ளத்தின் அடியாழத்தே கிடக்கும் பெரு நிதியங்கள் உங்கள் விழிகளுக்குப் புலப்படும்.

உங்கள் ஆன்ம அறிவின் ஆழத்தைக் கோல் கொண்டும் நூல் கொண்டும் துழவாதீர்கள்.

ஏனெனில் ஆன்மா எல்லையிகந்த அளப்பரிய தோர் பெருங்கடல்;

உண்மையினைக் கண்டுகொண்டேனென்று கூறுதீர்கள்.

ஒரு உண்மையினைக் கண்டேன் என்றே கூறுங்கள்.

ஆன்ம நெறியினைக் கண்டுகொண்டேனென்று சொல்லாதீர்கள்; என் நெறியிலே ஆன்மா நடந்து செல்வதைக் கண்டேன் என்றே கூறுங்கள்.

ஏனெனில் ஆன்மா பன்னெறிகளில் செல்கின்றது.

ஆன்மா ஒரு கோடிட்ட நெறியில் நடப்பதில்லை; நாணற் புல்லினைப் போல் நெட்டுவிட்டு வளர்வதுமில்லை.

ஆன்மா அரும்பாய் முகையாய் மலர்கின்றது, எண்ணிறந்த இதழ்கொண்ட செந்தாமரை மலர் போல.

பேச்சு

பின்னே ஒரு புலவன் கேட்பான் 'பேச்சு' பற்றிப் பேசும் என்று.

அவரும் மறுமொழி சொல்வார்:

உங்கள் சிந்தனை குலைந்தபோது நீங்கள் பேசுகின்றீர்கள்; உங்கள் உள்ளத்தின் தனிமையில் வாழ வகையில்லாதபோது உதடுகளில் வாழ்கின்றீர்கள். ஒலி மனந்திரிதலும் பொழுது போக்குமாகின்றது.

நீங்கள் பேசுகையில் சிந்தனையில் பாதி பெரும்பாலும் கொலையுறுகின்றது.

ஏனெனில் சிந்தனை என்பது பரந்த வெளியின் பறவை. சொல்லாலாகிய கூண்டில் அது சிறகை விரிக்கலாம். ஆனால் பறந்து செல்ல இய்லாது.

தனித்திருக்க அஞ்சி பேச்சினை நாடிச் செல்வோர் உங்களிற் பலர்.

தனிமையின் மோனம் அவர்கள் மெய்ப் படிவத்தை அவர்களுக்குக் காட்டி விடுகின்றது. அதிலிருந்தும் தப்ப நினைக்கின்றார்கள்.

பேசுவோரில் சிலருண்டு: பேரறிவோ, பெருஞ்சிந்தனையோ கொண்டவரல்லர்; ஆயினும்

தாமே அறியா ஒரு உண்மையைத் திடுமென அவர் வெளியாக்கலு முண்டு.

மற்றுஞ் சிலர் உண்டு; தம்முளே உண்மையை உணர்ந்தோர்; ஆயினும் சொல்லாலே சொல்லாதோர்.

இன்னவர் உள்ளத்தே பேருணர்வு மோன நடனம் செய்கிறது.

உங்களது நண்பனைச் சாலை வழியிலோ, சந்தை வெளியிலோ காணுங்கால் உங்கள் உள்ளே இருக்கும் பேருணர்வு உங்கள் உதடுகளை அசைக்கட்டும்; நாவினை ஆணையிடட்டும்.

உங்கள் குரலினுட் குரல் அவன் காதினுட் காதினுக்குப் பேசட்டும்.

ஏனெனில் அவன் ஆன்மா உங்கள் உள்ளத்தின் உண்மையைத் தன்னுள் விடாது வைத்திருக்கும், மதுவின் சுவையை உணர்வு வைத்தல் போல, நிறம் மறந்தபோதும் கலன் உடைந்த பின்னுமே.

காலம்

பின்னே ஒரு வானநூற் புலவன் கேட்பான், ஐயனே, காலத்தைப் பற்றி எங்களுக்குக் கூறும் என்று.

அவரும் மறுமொழி சொல்வார் :

நீங்கள் அளவிறந்ததையும், அளக்கவொண் ணாததையும் அளக்க நினைக்கின்றீர்கள்.

பொழுதும் காலமும் கண்டு, பொருந்த உங் கள் செயல்களை அமைக்க நினைக்கின்றீர்கள். உங்கள் உணர்வையும் அதற்கேற்ப நெறிப்படுத்த விரும்புகின்றீர்கள்.

காலத்தை ஒரு நதியாக்கி, அதன் கரையிலே யமர்ந்து அதன் ஒழுக்கை உற்றுநோக்கிய வண்ண மாயிருக்கப் பலகாலும் விரும்புகின்றீர்கள்.

ஆயினும் உங்களுள்ளே காலம் கடந்ததா யிருப்பது வாழ்வின் காலம் கடந்த வொன்றை அறிந்துள்ளது.

சென்ற நாள் இற்றைநாளின் நினைவெனவும், செலவிருக்கும் நாள் இற்றை நாளின் கனவென வும் அறிகின்றது.

உங்களுள்ளே இதுபோதும் இசை பாடி, சிந்தனையிலே தேங்கி நிற்கின்ற ஒன்று, தாரகை

களைப் பரவெளியிலே தெளித்த அந்த அனுதிக் கணத்தின் எல்லையிலே இன்றும் குடி வாழ் கின்றது.

தனது அன்பு செய்யும் ஆற்றல் எல்லையற்ற தென்பதை உங்களுள்ளே உணராதார் யாவரே?

ஆயினும் எல்லையற்ற அவ் வன்பே தன்னுள நடுவே சிறைப்பட்டு, அன்பாய எண்ணத்தினின்று அன்பாய எண்ணத்திற்கும் அன்பாய பணியி னின்று அன்பாய பணிக்கும் நெகிழ்வதை உண ராதார் யாவரே?

காலமும் அன்பு போலவே பகுத்தற்கரிய தாய், தொல்லையிகந்ததாய ஒன்றன்றோ!

ஆயினும் உங்கள் நினைவிலே காலத்தைப் பல பருவங்களாகப் பாகுபாடு செய்து அளக்க வேண்டுமேல் ஒவ்வொரு பருவகாலமும் ஏனைய வற்றைச் சுற்றி வளையுமாக.

இற்றைநாள் நினைவு கூர்ந்து, சென்ற நாளை யும் காதல் மிகுந்து வருநாளையும் தழுவுவதாக!

நன்மையும் தீமையும்

பின்னே அந்நகரின் பெரியார் ஒருவர் கேட்பார், நன்மையும் தீமையும் பற்றி எங்களுக்குச் சொல்லுமென்று.

அவரும் மறுமொழி சொல்வார் :

உங்களிடத்தேயிருக்கும் நன்மையைப் பற்றி நான் பேசலாகும் ; ஆனால் தீமையைப் பற்றி ஒண்ணாது.

ஏனெனில் தீமை யென்பது என்ன ? தனது பசி தாபத்தால் வதைக்கப்பட்ட நன்மைதானே !

மெய்யாகவே, நன்மை பசியுற்றபோது இருண்ட குகைகளுள்ளும் உணவைத் தேடுகின்றது. தாகமுற்ற காலை உயிரற்ற நீரையும் பருகுகின்றது.

நீங்கள் உங்களோடேயே ஒன்றுங்கால் சான்றோராவீர்.

ஆயினும் உங்களோடேயே நீங்கள் ஒன்றுக்கால் கயவரும் ஆகிர்.

ஏனெனில் பிணக்குற்ற வீடு கள்வர் குகையாமோ? அது ஒரு பிணக்குற்ற வீடே.

சுக்கானில்லா மரக்கலம் குறியேது மின்றி அபாயத் தீவங்களிடையே அலையலாம். ஆயினும் கடலாழத்தே மூழ்குவதில்லை.

உங்களையே நீங்கள் வழங்க முனையுங்கால் சான்றோராவீர்.

ஆயினும் உங்கள் நலனையே நீங்கள் நாடுங் கால் நீங்கள் கயவரும் ஆகீர்.

ஏனெனில் உங்கள் நலனையே நீங்கள் நாடுங் கால் நிலமென்னும் தாயை இறுகப்பற்றிப் பாலுண் ணும் வேரேயாவீர்.

“நீ என் போன்றே இரு, கனிந்து நிறைந்து நாளும் உன் வளப்ப மனைத்தையும் வழங்கு” என பழம் என்றும் வேரை நோக்கிச் சொல்வதில் லையே.

ஏனெனில் ஈதலே பழத்தின் வேட்கை, ஏற் றலே வேரின் வேட்கைபோல.

சொல்லிலே விழிப்பு மிக்கவராய் இருக்குங் கால் நீங்கள் சான்றோராவீர்.

ஆயினும் துயிலிலே பொருளற்று உங்கள் நாக்குழறும்போது நீங்கள் தீயவரும் ஆகீர்.

தடுமாறும் பேச்சும் வலுவிழந்த நாவை வலி மைப்படுத்தலாம்.

* * *

உறுதியோடு உங்கள் இலட்சியத்தை நோக்கி அடியெடுத்துத் துணிந்து செல்லுங்கால் நீங்கள் சான்றோராவீர்.

ஆயினும் அங்கே தயங்கிச் செல்லும்போது தீயரும் ஆகீர்.

தயங்கிச் செல்வோரும்கூட பின்னோக்கிச் செல்வோர் அல்லரே.

ஆனால் வன்மையும் விரைவும் கொண்ட நீங்கள் இரங்குவதாய் எண்ணி முடவர் முன்னே தயங்கிச் செல்லற்க.

எண்ணிறந்த வகையிலே நீங்கள் நல்லோர். நல்லோரே அல்லரெனினும் தீயோர் அல்லீர்: ஏதோ சற்றே அலைந்து பின் தங்கியவரேயாவீர்.

என் செய்வது, கலைமான் ஆமைக்குப் பாய்ச்சலைக் கற்பிக்க இயலாதே!

அவ்வேட்கை உங்கள் எல்லோரிடத்துமே உள்ளது.

ஆனால் சிலருள்ளே அவ்வேட்கை, மலைச்சாரலின் மர்மங்களையும், கானகத்தின் இன்னிசையையும் சுமந்து கடல் நோக்கி விரையும் தடுக்கரிய வெள்ளப்பெருக்கு.

வேறு சிலருள்ளே அது வளைவிலும் நெளிவிலும் கழிந்து கடலின் கரையை அடையத் தயங்கும் மெல்லோடை.

பெரும் வேட்கையுடையோன் சிறுவேட்கை யுடையோனை நோக்கி, "தயங்குவதேனோ, மெல்ல நகர்வதேனோ" என்று கேட்க வேண்டா.

ஏனெனில் உண்மையாகச் சான்றோர் எனப் படுவோர் ஆடையற்றவனை நோக்கி "உன் ஆடை எங்கே?" என்று கேட்பதில்லை; வீடில்லாதவனை நோக்கி "உன் வீடென்ன ஆயது?" என்றும் கேட்பதில்லை.

பிரார்த்தனை

பின்னே மெய்யடியாள் ஒருத்தி கேட்பாள், பிரார்த்தனையைப்பற்றி எங்களுக்குச் சொல்லு மென்று,

அவரும் மறுமொழி சொல்வார் :

அல்லலுற்றபோதும் தேவைகள் எழுந்த போதும் நீங்கள் இறைவனை வேண்டுகின்றீர்கள். உங்கள் மகிழ்ச்சிப் பெருக்கிலும், நிறைசெல்வ வாழ்விலும் அங்ஙனமே வேண்டலாகாதா ?

உங்கள் பிரார்த்தனை என்பதுதான் என்ன, உள்ளம் ஜீவவானில் எழுந்து பரவுதலல்லால்.

பரவெளியிலே உள்ளத்தில் இருளைக் கொட்டுவது ஆறுதல் என்றால், ஒளியைக் கொட்டு வதும் இன்பமாகுமன்றோ ?

தொழுகைக்கு ஆன்மா உங்களை அழைக்கும் போது, அழுதே ஆகவேண்டுமானால் அந்த அழு கையூடே அது மேலும் மேலும் உங்களைச் செலுத் தட்டும் ; இறுதியில் சிரிப்போடு வருவீர்கள்.

நீங்கள் தொழும்போது, உங்களைப்போலவே அதுகாலை தொழும் அனைவரையும் விசும்பிலே சந்திக்க எழுகின்றீர்கள்; தொழும்போதன்றி அவ ரைச் சந்திக்கவும் மாட்டீர்கள்.

ஆகவே அந்தக் கண் காணுக் கோவிலுக்கு நீங்கள் செல்வது பேரானந்தத்திற்கும், இன்ப ஆன்ம ஒருமைப்பாட்டுக்கும் அல்லாது மற்றெதற்கும் ஆகற்க!

ஏனெனில் கேட்பதொன்றையே கருதி கோயிலுள் நுழைவதானுல் நீங்கள் பெறமாட்டீர்கள்.

நீங்கள் அங்கே தாழவேண்டாம். தாழ்ந்தவர் எவரும் உயர்த்தப்படமாட்டார்.

அன்றியே, பிறர் நலம் கருதி அங்கு குறையிரக்கச் சென்ருலும், கேட்கப்படமாட்டாது.

காணவொண்ணுக் கோயிலுள்ளே நுழைந்து விடுங்கள் : அதுவே போதும்.

சொல்லால் தொழுகை செய்ய உங்களுக்கு என்னுல் கற்பிக்க இயலாதே.

இறைவன் உங்கள் சொற்களுக்குச் செவி சாய்ப்பதில்லே; அவனே அவற்றை உங்கள் இதழ் வழி மொழியும் போதன்றி.

காடு, மலே, கடல், இவை செய்யும் தொழுகையையும் நான் உங்களுக்குக் கற்பிக்க இயலாது.

ஆனுல் காடு, மலே, கடல் இவையிடையே பிறந்தவர் நீங்கள்; உங்கள் உள்ளத்திலேயே அவைகளின் தொழுகையைக் கண்டு கொள்ளலாம்.

இரவின் அமைதியிலே நீங்கள் உற்றுக் கேளுங்கள் ; மோனத்திலே அவை மொழிவது கேட்கும்.

எங்கள் இறைவா ! சிறகு பெற்ற எங்கள் உணர்வே ! எமது அந்தரங்க சித்தம் உனது சித்தமே.

உனது விருப்பமே எங்கள் விருப்பமுமாம்.

நீயே எம்முன் நின்று உனது இரவுகளை எங்களது பகல்களாய் ஆக்குகின்றுய், அவை உனது பகல்களுமேயாம்.

நாங்கள் உன்னை வேண்டுவது யாது ? வேண்டத் தக்கது அறிவோய் நீ, யாமுணரும் முன்னேயே.

நீயே எங்களது தேவை; உன்னையே மேன் மேலும் வழங்கு; வழங்க வழங்க யாவுமே பெறு கின்ருேம்.

இன்பம்

பின்னே, நகருக்கு ஆண்டொருமுறை வந்து போகும் துறவி ஒருவர் கேட்பார், இன்பத்தைப் பற்றி எங்களுக்குச் சொல்லுமென்று.

அவரும் சொல்வார் :

இன்பமோர் விடுதலைக்கீதம் ; ஆயினும் அது விடுதலையன்று ;

அது உங்கள் ஆசையின் மலர்ச்சி, ஆயினும் அதன் கனியுமன்று ;

அது, உயர்ச்சிக்கு ஆழம் விடுக்கும் அழைப்பு;

ஆயினும் அது ஆழமுமன்று, உயர்ச்சியுமன்று ;

சிறைப்பட்டது சிறகு விரிப்பதாகும் ;

ஆயினும் அது வானைச் சூழ்வது மன்று;

ஆம், மெய்யாகவே, இன்பம் ஒரு விடுதலைக் கீதம்.

எனவே அதனை உளங்குளிரப் பாடுமென்பேன் ; ஆயினும் பாட்டிலே உங்கள் உள்ளத்தைப் பறிகொடுக்க வேண்டாமென்பேன்.

உங்களுக்குள்ளே இளைஞர் சிலர் இன்பமே யாவுமாபோல் அதனைத் தேடுகின்றனர்; அதற்காக அவரைக் குற்றம் காண்கின்றார்கள்; கண்டிக்கின்றார்கள்.

நான் அவரைக் குற்றம் காணவும்மாட்டேன்; கண்டிக்கவும்மாட்டேன்.

தேடட்டும் என்று அவர்களைவிட்டு விடுவேன்.

ஏனெனில் அவர்கள் இன்பமாதைக் காண்பார்கள், ஆனால் அவளை மட்டுமன்று.

எழுவர் அவள் தங்கையர், அவ்வெழுவருள்ளே மிகக் குறைந்தவளும் இன்பத்தினும் எழில் வாய்ந்தவள்.

வேரை அகழச் சென்றவன் நிதியினைக் கண்டெடுத்த கதையை நீங்கள் கேட்டதில்லையா?

உங்களுள் முதியோர் சிலர் குடி மயக்கில் இழைத்த குற்றங்கள் போல, நுகர்ந்த இன்பங்களை நினைந்து வருந்துகின்றார்கள்.

வருந்துவதால் மனம் மாசே அடைகின்றது; திருந்தியதாகாது.

நன்றி யுள்ளத்தொடு தாம் நுகர்ந்த இன்பத்தை அவர் நினைந்து எண்ணட்டும்; கோடைகால அறுவடையை எண்ணுவது போன்று.

எனினும் வருந்துதல் அவர்களுக்கு ஆறுதலை அளிக்கின் வருந்தட்டும்;

உங்களுட் சிலர் நாடித்தேடும் இளைஞராயு மில்லை; எண்ணி வாடும் முதியராயுமில்லை;

அங்ஙனம் நாடவும் நினைக்கவும் அஞ்சி அவர்கள் இன்பங்கள் அனைத்தையும் விலக்குகின்றனர்.

எங்கு ஆன்மநாட்டத்தைக் கைவிட்டு விடுகிறோமோ, அல்லது அதற்குத் தீங்கு இழைத்து விடுகிறோமோ என்று.

ஆனல் வேண்டாது விடுவதிலும் இன்பம் உண்டு.

எனவே, இவ்வண்ணமாக, நடுங்கும் கைகளுடன் வேரையே நாடி அகழ்ந்தாலும், இவரும் நிதியினைக் கண்டெடுக்கின்றனர்.

நீங்களே சொல்லுங்கள், ஆன்மநாட்டத்துக்குத் தீங்கு இழைக்க வல்லவன் எவன்?

இரவிலே புள்ளின் இசை இரவின் அமைதிக்குத் தீங்கிழைக்க வல்லதோ? மின்மினிதான், விண்மீனைக் குறைசெய்ய வல்லதோ? அன்றி தீயோ, புகையோ காற்றுக்குச் சுமையாகவல்லதோ?

ஆன்மீகம் என்பது அசைவற்ற சிறு குட்டையோ, அதனை உங்கள் சிறு கோலால் கலக்கிட?

இன்பத்தை நீங்கள் வேண்டாது விலக்குகின்றீர்கள், ஆனல் அங்ஙனம் செய்கையிலே இன்பப்பற்றினை உங்கள் உள்ளத்தின் அடி ஆழத்திலே பெரும்பாலும் அடக்கியே வைக்கின்றீர்கள்

விலக்கினோம் இன்று என்று எண்ணியது நாளைக்காகக் காத்திருக்காதோ, யாரறிவார்?

உரியது எது, உகந்தது எது என்று உங்கள் உடல்கூட உணர வல்லது; ஏமாறாது;

உங்கள் உடலே உங்கள் ஆன்மாவின் யாழ். அதிலே இன்னிசையை எழுப்புங்கள்; அன்றி முரணொலியையே எழுப்புங்கள்; உங்களைப் பொறுத்தது அது.

இப்பொழுது உங்கள் நெஞ்சொடு கேளுங் கள், "இன்பத்திலே நல்லது யாது அல்லது யாது எனத் தெரிவது எவ்வாறு?" என்று.

உங்கள் கழனிக்கும் பொழிலுக்கும் செல் லுங்கள், மலரின் தேனைத் திரட்டுவதே வண்டின் இன்பம் என்பதை அதுகாலை அறிவீர்கள்;

ஆனால் வண்டுக்குத் தேனை வழங்குவது மலருக்கும் இன்பமே,

ஏனெனில் வண்டுக்கு மலர் வாழ்வின் ஊற்று.

மலருக்கு வண்டு காதலின் தூதன்,

வண்டுக்கும், மலருக்கும், இரண்டுக்குமே கொள்வதும் கொடுப்பதும் விருப்பும் பெருங்களிப் புமே யாம்.

ஆர்ப்பலீச மக்களே, உங்கள் இன்பத்திலே மலர்களைப்போலும் வண்டுகளைப்போலும் இருப் பீராக!

அழகு

பின்னே, கவிஞர் ஒருவர் கேட்பார், அழகு பற்றி எங்களுக்குச் சொல்லு மென்று,

அவரும் சொல்வார்:

அழகெனும் மங்கையை எங்கே தேடுவீர், எவ்வாறு காண்பீர், அவளே உங்கள் வழியும், வழிகாட்டியும் ஆகாக்கால்?

அவளைப்பற்றி எவ்வாறு பேசுவீர், அவளே உங்கள் பேச்சைப் புனையாக்கால்?

துன்புற்றவரும் புண்பட்டவரும் சொல்வார்;

" அழகு அன்பினள் ; இன் சொல்லினள் ; தனது மாட்சி கண்டு தானே நாணுது நாணும் யௌவனத் தாயைப்போல அழகு நம்மிடையே உலவுகின்றுள்."

உணர்ச்சி வயப்பட்டோர் சொல்வார்:

" அல்ல, அழகு ஆற்றலிற் பெரியாள் ; அச்சம் கிளர்த்துவாள்,

"கரும்புயல்போன்று மண்ணையும் விண்ணை யும் கலக்கும் இயல்பாள் "

சோர்ந்தோரும், களைத்தோரும் சொல்வார்:

" அழகு மென்காற்றின் இன்மொழியாள்; அவள் நமது உணர்விலே உரையாடுகின்ருள்.

" பேரிருளைக் கண்டு நடுங்கும் சிறியதொரு தீபம்போல, நமது மோனத்துக்கு அவள் குரல் அடங்குகின்றது."

எனிலோ சஞ்சலமுற்ருேர் சொல்வார்,

" மலைகளிடையே அவள் இடியெனப் பேரொலி செய்தலைக் கேட்டுள்ளோம்;

"அப்பேரொலியொடு குளம்புகளின் அதிரொலியும், சிறகுகளின் அடியொலியும் சீயங்களின் முழக்கொலியும் கலந்தே வந்தன."

இரவிலே நகர் காப்போர் சொல்வார்:

" அழகு வைகறைப்போதில் கீழ்த்திசையிலே முகிழ்த்தெழுவாள் ;"

நண்பகலில் உழைப்பாளரும், வழி நடப்போரும் சொல்வார்:

" அந்திமாலையின் சாளரங்களினூடே அவள் மண்ணுலகை உற்று நோக்குதலைக் கண்டுள்ளோம்."

கொடுங்குளிர் காலத்தே உறை பனியிடையே வாழ்வோர் சொல்வார்:

" வசந்தத்தோடு குன்றுகளிடையே அவள் தாவித் தாவி வருவாள்."

கோடை வெய்யிலில் அறுவடை செய்வோர் சொல்வார்:

"இலையுதிர் காலத்து இலைகளோடு அவள் நர்த்தனம் செய்வதைக் கண்டுள்ளோம்.

"அவள் கூந்தலில் வெண்பனி சற்றே படிந் திருத்தலையும் கண்டோம்."

இவ்வண்ணமெல்லாம் அழகுபற்றி நீங்கள் பேசியுள்ளீர்;

ஆயினும் உண்மையில் நீங்கள் பேசியது அவளையன்று, நிரம்பா உங்கள் தேவைகளையே.

ஆனால், அழகு ஒரு தேவையன்று, இன்ப நிறைவே.

அது நீர்வேட்கைகொண்ட நாவன்று; நீட் டிய வெறுங்கையுமன்று;

அது, உணர்ச்சி கொழுந்துவிடும் உள்ளம்; மந்திரத்தே மயக்குண்ட ஆன்மா.

நீங்கள் பார்க்க விழையும் படிவமல்ல, கேட்க விரும்பும் கீதமுமல்ல.

கண்கள் மூடினும் காணுமோர் உருவம், காதை அடைக்கினும் கேட்குமோர் கீதம்.

திரை முதிர்ந்த மரத்தின் பட்டையுள்ளிருக்கும் பாலன்று, உகிரொடு பொருந்திய பறவையின் சிறகு மன்று,

என்றும் மலர்ந்து நிற்கும் இனிய பூஞ்சோலை யாம், இடையருது பறந்து நிற்கும் கந்தர்வக் கூட்ட முமாம்.

ஆர்ப்பலீச மக்களே, அழகே வாழ்வு, வாழ்வு தன் திரை நீக்கித் தெய்வீக வதனத்தைக் காட்டுங் கால்.

ஆனல், நீங்களே வாழ்வு, நீங்களே திரை யும்.

அழிவிலாக் காலதத்துவம், தன்னைக் கண்ணுடியுள் காண்பதே அழகு.

நீங்களே காலம், நீங்களே கண்ணுடி.

சமயம்

பின்னே முதியவராம் ஒரு மதகுரு கேட்பார், சமயத்தைப்பற்றி எங்களுக்குச் சொல்லுமென்று,

அவரும் சொல்வார் :

நான் இந்தநாள் மற்றெதனையும் பற்றிப் பேசியதுண்டோ?

அனைத்துச் செயலும், அனைத்துச் சிந்தனையும் சமயமன்றோ?

செயலும் சிந்தனையுமே இல்லாதாயினும், கைகள் கல்லுடைக்கும்போதும், தறியினில் பா வோட்டும்போதும் ஆன்மாவிலே வற்றாது ஊற்றெடுக்கும் வியப்பும் புதுமையுமே சமயமன்றோ ?

செயலிலிருந்து கொள்கையைப் பிரித்தல் ஒருவனுக்குஇயலுமோ? அல்லது தன்தொழிலிலிருந்து நம்பிக்கையைப் பிரித்தல் ஒருவனுக்கு இயலுமோ?

தனக்கிருக்கும் வாழ்நாட்களை "கடவுளுக்கு இது; எனக்கு இது ; என் ஆன்மாவுக்கு இது ; என் உடலத்துக்கு இது" என்று பகுத்துப் பிரிக்க ஒருவனுக்கு இயலுமோ ?

உங்கள் வாழ்நாட்களெல்லாம் தன்னிலே எழுந்து தன்பால் மீள, பரவெளியில் அடிக்கும் சிறகுகளாகும்.

ஒழுக்கத்தினும் உயர்ந்த உடையும் உண்டோ? உண்டென ஒருவன் கருதுவானுகில் அவனுக்கு நிர்வாணமே சாலவும் நன்று.

காற்றும் வெயிலும் அவன் தோலினைத் துளையிட வல்லனவோ ?

உலகோர் வகுத்த நெறியிலே கட்டுண்டவன் தனது ஆன்மக்குயிலைக் கூட்டினுள் அடைக்கின்ருன்.

கட்டற்ற கீதம் கூண்டுச் சிறைவழியே வருவதில்லை.

திறத்தலேயன்றி அடைத்தலில்லாப் பலகணி ஒருவனது தெய்வ வணக்கம். அது அடைத்தலுமுண்டேல் அவனுக்கு ஆன்ம இல்லம் காண்டற்கரிதே; என்னெனில் உதயத்திலிருந்து உதயம் வரையுமன்ரே அப்பலகணிகள் !

நாளும் நீங்கள் வாழும் வாழ்வே உங்களது கோயிலும் சமயக் கொள்கையுமாம்.

அங்கே செல்லுகையில் உங்கள் உடைமை யாவும் எடுத்துச் செல்க ;

ஏரையும் எரி உலையையும் எடுத்துச் செல்லுக; கூடத்தையும் வேய்ங்குழலையும் எடுத்துச் செல்லுக.

வாழ்வை நடாத்தவும் மகிழ்வினைக் கூட்டவும் வேண்டும் பொருள் அனைத்துமே.

ஏனெனில் தியானப் பரவசத்திலே வாழ்வில் நீங்கள் கண்ட வெற்றிகளினும் உயர்ந்து எழுதலோ, தோல்விகளினும் தாழ்ந்து வீழ்தலோ இயலாது;

எனவே எல்லோரையுமே சேர அழைத்துச் செல்லுக;

ஏனெனில் தெய்வ வணக்கத்தில் ஈடுபடுகையிலே அவர்கள் ஆசைகளுக்கும் மேலாக உயர்ந்து நீங்கள் பறக்க இயலாது, அவர்கள் ஏக்கத்திற்கும் கீழாகத் தாழ இயலாது.

எனவே இறைவனே அறிய விரும்புவீராகில் முடிவில்லா விசாரணைகளிலே ஈடுபட வேண்டாம்.

மாருக உங்களைச் சுற்றும் நோக்குங்கள், அவன் உங்கள் குழந்தைகளோடு விளையாடுவதைக் காண்பீர்கள்.

வான வெளியிலும் பாருங்கள் ;

அவன் மேகத்தில் உலவுவதையும் மின்னொளியில் தன் கரங்களை நீட்டுவதையும் மழையில் இறங்கி வருவதையும் காண்பீர்கள்.

பூவின் புன்னகையிலே அவனைக் காண்பீர்கள்; பின்னே எழுந்து தன் கரங்களை மரங்களிலே அசைத்தலையும் காண்பீர்கள்.

இறப்பு

பின்னே அலமித்திரை பேசுவாள்,

இறப்பினைப் பற்றி இப்பொழுது கேட்கிறோம் என்று.

அவரும் சொல்வார் :

இறப்பின் இரகசியத்தை நீங்கள் அறிய விரும்புகின்றீர்கள்.

ஆனால் அதை எவ்வாறு தெரிந்து கொள்வீர்கள், வாழ்வின் இதயத்தே அதைத் தேடினாலன்றி?

இரவினுக்குக் கட்டுண்டு, பகலினைப் பார்க்க இயலா விழிகொண்ட ஆந்தைக்கு ஒளியின் மர்மத்தை வெளியிட ஒண்ணாது.

இறப்பின் ஆவியைக் காண மெய்யாகவே விரும்பின் வாழ்வின் உடலுக்கு உங்கள் நெஞ்சத்தை அகலத் திறவுங்கள்.

ஏனெனில் வாழ்வும் சாவும் ஒன்றே, ஆறும் கடலும் ஒன்றேயாமாறு போல்.

உங்கள் மனக்கோட்டைகளின், ஆசைகளின், அடி ஆழத்திலே கிடக்கின்றது பரத்தைப்பற்றி நீங்கள் கொண்டுள்ள மௌன உணர்வு.

உறைபனிக்குக் கிழாழ்ந்து, வர இருக்கின்ற வசந்த காலத்தைக் கனவு கண்டு கொண்டிருக்கும் விதையினைப்போல நீங்களும் கனவு காண்கின்றீர்கள்.

கனவுகளை நம்புங்கள்: கனவுகளிலே நித்தியத்தின் கதவங்கள் மறைந்திருக்கின்றன.

கரம் நீட்டி வாழ்த்த விருக்கும் அரசன் முன்னே, ஒடுங்கி நின்ற இடைச் சிறுவன் கொள்ளும் நடுக்கம் போல்வதுமே உங்கள் மரண பயம்.

நடுங்கினுனேயாயினும் உள்ளத்தினுள்ளே வழுத்தினுனில்லையோ இடையன், மன்னவன் சின்னத்தை அணிவோமென்ற எண்ணத்தினல்?

ஆயினும் நடுக்கமே அவன் நினைப்பில் முனைப்பாயில்லையோ?

இறப்புஎன்பதுதான் என்ன, ஆடையில்லாது காற்றிலே நிற்க, கதிரவனிலே உருகிக் கலத்தலல்லாது?

மூச்சுப் பிரிவது என்பதுதான் என்ன, எழுந்து, விரிந்து கட்டொன்றுமின்றி இறைவனை நாடும் வண்ணம் அமைதியே அறியா மறி திரைகளினின்றும் அம்மூச்சினை விடுவித்தலல்லாது?

மௌன ஆற்றிலே பருகும்போதுதான் நீங்கள் மெய்யாகப் பாடுகின்றீர்கள்.

மலையுச்சியினை அடைந்த பின்னரே நீங்கள் மெய்யாக மேலேறத் தொடங்குகின்றீர்கள்.

என்று உங்கள் உறுப்புக்களை மண் உரிமை கொள்கின்றதோ அன்றே நீங்கள் மெய்யாக நடனம் ஆடுகின்றீர்கள்.

பிரிவு

இதோ மாலைப்பொழுதும் வந்தணைந்தது.

முக்காலமும் உணரவல்ல அலமித்திரையும் சொல்வாள் :

வாழிய இந்நாள் வாழ்க இத் தலமும் ;

வாழிய அருண்மொழி மலர்ந்தநும் முணர்வும்

அவரும் சொல்வார் :

மொழிந்ததும் யானோ? மொழியக் கேட்டவனும் யானன்றோ?

பின்னர் ஆலயத்தின் படிகளிலே இறங்கி வந்தார் ; அனைவரும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

மரக்கலத்தை அடைந்து மேற்றளத்தில் ஏறி நின்றார்.

மீண்டும் மக்களை நோக்கி எழுந்த குரலில் சொல்லுவார் :

ஆர்ப்பலீச மக்களே! உங்களை விட்டுப் பிரியுமாறு காற்று என்னைப் பணிக்கின்றது.

காற்றைப்போன்று கடுகி நான் விரைய விரும்பவில்லை. ஆயினும் நான் போகவே வேண்

டும், அலேந்து திரியும் ஏகாந்த நெறியை நாடி. நாங்கள் ஒரு நாளேப் போக்கியவிடத்து மற்ருெரு நாளேத் தொடங்குவதில்லே. மறைகின்ற ஞாயிறு விட்ட இடத்து எழுகின்ற ஞாயிறு எங்களேக்கண்ட தில்லே.

உலகு துயில் கொள்ளும்போதும் நாங்கள் வழி நடக்கின்ருேம் :

வாழ்விலும் தாழ்விலும் ஒட்டிக் கிடக்கும் செடிகளின் விதைகள் நாங்கள் ; பழுத்து முற்றி இதயம் நிறைவுற்ற பின்னரே நாங்கள் காற்றிடம் வழங்கப்பட்டு பரக்கச் சிதறப்படுகிருேம்.

உங்களிடையே நான் உறைந்த நாட்கள் ஒரு சிலவே ; அவற்றிலும் சிலவே நான் பகர்ந்த மொழிகள்.

ஆயினும் என் குரல் உங்கள் செவியில் மெலிந்த காலத்தும், என் அன்பு உங்கள் நினேவி லிருந்து மங்கிய காலத்தும் நான் மீண்டும் வரு வேன்.

வந்து முன்னிலும் நிறைந்த உள்ளத்தோடும், முன்னிலும் கனிந்த மொழிகளாலும் நான் உரை யாடுவேன்.

ஆம், நான் அலேப்பெருக்குடன் மீண்டும் வருவேன்.

இறப்பு என்னே மறைக்கினும், இறப்பினும் மேலாம் மோனம் என்னேச் சூழ அணேக்கினும் மீண்டுமே உங்கள் உணர்வை நாடுவேன்.

விணையும் நாடேன். நான் சொல்லியவற்றில் மெய்ப்பொருள் ஏதேனும் உண்டேல் அம்மெய்ப் பொருள் மேலும் தெளிந்த குரலில் வெளியாக்கிக் கொள்ளும், உங்கள் சிந்தனைக்கேற்ற மிகப் பொருந்திய சொற்களால்.

காற்றெடு நான் செல்கின்றேன், ஆர்ப்பலீச மக்களே, சூனிய வெளிக்குள்ளே யன்று:

உங்கள் ஆசைகளின் நிறைவும் என் அன் பின் நிறைவுமாய் இந்த நாள் ஆகாவிடில் அது மற் ருெருநாளின் வாக்குறுதியாய் அமையட்டும்.

மனிதன் தேவைப்படுவன மாறும், ஆனல் அன்பு மாறுவதில்லை: அன்பு தேவைகளை நிறை வேற்ற வேண்டுமென்ற அவன் ஆசையும் மாறுவ தில்லை.

ஆகவே இதை உணருங்கள், நான் மோனப் பெருவெளியிலிருந்து மீண்டும் வருவேனென்று.

பசும்புல் வெளியிலே நீர்த்துளிகளை மட்டுமே விட்டு காலையில் கலைகின்ற மூடுபனி, மேலெ ழுந்து எழில் முகிலாய்த் திரண்டு மீண்டும் மழை யாய்ப் பொழியும்.

அம்மூடுபனி போலல்லாது மற்று நான் இருந்தேனல்லேன்.

இரவின் அமைதியிலே, நான் உங்கள் வீதி களிலே நடந்துள்ளேன். என் ஆன்மா உங்கள் இல்லங்களிலே புகுந்துள்ளது.

உங்கள் இதயத்துடிப்புகள் என் இதயத்துள்ளாயின; உங்கள் மூச்சும் என் முகத்திலே வீசியது. நானும் உங்கள் அனைவரையும் அறிந்து கொண்டேன்.

ஆம். உங்கள் இன்பமும் துன்பமும் அறிந்தேன், உங்கள் துயிலிலே வந்த உங்கள் கனவெல்லாம் என் கனவாயின.

பலகாலும் உங்களிடையே மலையிடைப்பட்ட ஏரியானேன்.

உங்களகத்தே யுள்ள மலையுச்சிகளையும் வளைந்த சரிவுகளையும் நான் என்னிலே பிரதிபலிக்கக் கண்டேன்.

கூட்டங் கூட்டமாய் விரைந்து செல்லும் உங்கள் ஆசைகளையும் சிந்தனைகளையுமே பிரதிபலிக்கக் கண்டேன்.

உங்கள் குழந்தைகளின் புன்னகை ஓடைகளும் உங்கள் இளைஞர்களின் வேட்கையாறுகளும் என் இதய மோனத்தை அடைந்தன.

எனது ஆழத்தை அடைந்தபோதும் அப்புன்னகை யோடைகளும், அவ்வேட்கையாறுகளும் தம் பாடலை நிறுத்தவில்லை;

ஆயின் புன்னகையினும் இனியதாய், வேட்கையினும் மேலதாய் ஒன்றென்னை வந்தெய்தியது.

அதுவே உங்கள் அகத்தே எல்லை யற்றதாய் இருப்பது.

எந்த அகண்டாகார புருஷனில் நரம்புகளும் தசைகளுமாய் நீங்கள் அனைவரும் அமைந்துள்ளீர்களோ,

எவன் மந்திர ஒலியில் உங்கள் பாடல்கள் யாவும் நாதமற்ற வெறுந்துடிப்பாகின்றதோ,

அந்த அகண்டாகாரப் புருஷனிலேயே நீங்களும் அகண்டாகாரப் புருஷர்களாயிருக்கிறீர்கள்.

அவன் காட்சியிலேதான் உங்களைக் கண்டேன் : உங்களைக் காதலித்தேன்;

அந்த அகண்ட வெளியில் அடங்காத எவ்விடத்தை அன்பு அணையக்கூடும் ?

எந்தக் கனவுகள், எந்தத் தோற்றங்கள், எந்த நம்பிக்கைகள் அன்பினை வென்று உயர்ந்து மறைக்க வல்லன ?

வாசப் பருவமலர் பூத்துச் சொரியும் பராரை மரம்போலும் அவ்வகண்டகார புருஷன் உங்களிலே;

அவன் பேராற்றல் மண்ணொடு உங்களைப் பிணைக்கின்றது, அவன் நறுமணம் உங்களைப் பர வெளியில் உயர்த்துகின்றது, அவன் அழிவின்மையிலேயே நீங்களும் அழிவற்றவரா யிருக்கின்றீர்கள்.

உங்களுக்குப் பலர் சொல்லி யுள்ளார்கள்: நீங்கள் ஒரு சங்கிலித்தொடர்போல என்று, தொட

ரின் மிக வலுக்குறைந்த வளையத்தின் வலுவே உங்கள் வலுவுமென்று.

இது முற்றிலும் உண்மையன்று, மிக வலுக்கொண்ட வளையத்தின் வலிவும் உங்கள் வலுவே.

உங்கள் மிகச் சிறிய செயல்கொண்டு உங்களை அளவிடல் நுரையின் மென்மைகொண்டு பேராழியின் ஆற்றலை அளவிடுதலாகும்.

உங்கள் பிழைகளைக்கொண்டு உங்களை நிறையிடல் மாறுபாடுடையன என்று பருவகாலங்களைப் பழித்தலாகும்.

மெய்யே, நீங்கள் பேராழி போன்றவர்கள்.

உங்கள் கரைகளிலே தட்டுண்ட கப்பல்கள் அலைப்பெருக்கை எதிர்நோக்கி நிற்பினும், நீங்கள் அவ்வலைப் பெருக்கை விரைவுசெய்ய இயலாது, கடலுக்கும் கூடாதவாறுபோல.

பருவ காலங்களைப் போலவுமே நீவீர்.

உங்கள் கடுங்குளிர் காலத்தில் நீங்கள் வசந்தத்தை மறுத்தாலும்

வசந்தம் உங்களுள்ளே இளைப்பாறத் தூங்குகிறாள், தூக்க மயக்கத்திலே புன்னகை செய்கிறாள், முனிவு கொள்வதில்லை.

இவற்றையெல்லாம் நான் சொன்னது, "இவர் நம்மை நன்றாகப் புகழ்ந்தார், நம்மிடை

நல்லவையே கண்டார்" என்று ஒருவரோ டொரு வர் நீங்கள் சொல்லிக் கொள்வதற்காக வல்ல.

சிந்தனையில் நீங்கள் அறிந்தனவற்றையே நான் சொல்லால் சொல்கின்றேன்.

சொல்லாலே வரும் அறிவென்பதுதான் என்ன, சொற்கடந்த அறிவின் ஒரு நிழலேயன்றி?

உங்கள் சிந்தனைகளும் என் சொற்களும் முத்திரையிடப்பட்ட ஒரு நினைவுப்பேழையிலிருந்து வரும் அலைகளாகும். அப்பேழையுள்ளே சென்ற நாட்கள் பற்றியும், நம்மையோ தன்னையோ பூமி அறிந்து கொள்ளாத பண்டை நாட்கள் பற்றியும், குழப்பத்தால் பூமி கலக்கம் கொண்ட இரவுகள் பற்றியும் ஏடுகள் உள்ளன.

மதி நலம் வாய்ந்தோர் உங்களிடையே தங் கள் மதிநலத்தை அளிக்க வந்தனர், நானோ உங் கள் மதிநலத்தைப் பெற வந்தேன் ;

இதோ காண்மின், மதிநலத்தினும் மேலாய தொன்றைக் கண்டு கொண்டேன்.

அதுவே உங்களுள் மேன்மேலும் கொழுந்து விட்டெரியும் தழற்சோதி.

ஆனால் நீங்கள் அது படர்வதை அறியாது, உங்கள் நாட்கள் விரைகின்றன என்று அழுது ஓலமிடுகின்றீர்கள்.

கல்லறைக்கு அஞ்சும் உடலங்களின் உயிரைத் தேடிவரும் உயிராம் அது.

இங்கே கல்லறைகள் என்பன இல்லை. இம் மலைகளும் சமவெளிகளும் தொட்டிலும் படிக்கல்லுமாம்.

உங்கள் மூதாதையரை அடக்கஞ் செய்த வயல் வழியே நீங்கள் செல்லுங்கால் சற்றே உற்று நோக்குங்கள். அங்கே நீங்களும் உங்கள் மக்களும் கைகோர்த்து நடன மிடுவதைக் காண்பீர்கள்.

மெய்யாகவே உங்களை அறியாதே நீங்கள் களியாட்டயர்கின்றீர்கள்.

உங்களிடையே வேறு சிலர் வந்தனர். உங்கள் பக்தியை வியந்து பொன்னனைய வாக்குறுதிகள் அளித்தனர். கைம்மாருக நீங்கள் அவர்களுக்கு அளித்தவை பொன்னும், பொருளும் புகழுமேயாம்.

ஒரு வாக்குறுதி போலுமன்று நான் உங்களுக்கு அளித்தது, ஆயினும் அவர்களினும் மிகுதியாக எனக்கு நீங்க்ள் அளித்துள்ளீர்கள்.

ஊற்றெடுத்துப் பொங்கும் வாழ்வுத்தாகத்தை நீங்கள் எனக்கு அளித்துள்ளீர்கள்.

உறுதியாகக் கூறுகிறேன், தன் வேட்கையனைத்தும் வற்றியுலரும் இதழ்களாகவும், வாழ்

வனைத்தும் வற்ருத ஒரு ஊற்ருகவும் மாற்றவல்ல சிறந்த கொடையினும் ஒரு மனிதனுக்கு கிட்டற்பாலதொன்றுண்டோ?

இதிலேதான் என் புகழும் பரிசும் அமைந்துள்ளன:

எதிலேயெனின், சுனையை அணுகி நான் நீர் பருக வருங்காலத்தெல்லாம் அந்த ஜீவ நீரும் தாகமுற்றிருக்கக் காண்கின்றேன். நான் அதைப் பருக அது என்னைப் பருகுகின்றது;

உங்களில் சிலர் என்னைத் தற்பெருமை கொண்டவன் என்றும், கொடுத்தால் பெற மிகு நாணம் கொண்டவன் என்றும் கருதுகின்றீர்கள்.

மெய்யே, நான் மிகு நாணம் உடையவனே, கூலி என்று கொடுப்பீராயின்; சற்றும் தயங்கேன் கொடையென்று அளிப்பாராகில்.

என்னை உங்கள் விருந்தறையிலே நீங்கள் அமர்த்த விரும்பியபோது நான் காட்டிலே கனிகளைத் தின்று வாழ்ந்தேன்.

எனக்கு நீங்கள் உறைவிடம் தந்து உபசரிக்க விரும்பியபோது நான் கோயில் முற்றத்தே துயின்றேன். ஆயினும் அல்லும் பகலும் நீங்கள் காட்டிய அன்புப் பரிவன்ருே என் உணவை நாவுக்கு இனிக்கச் செய்தது. என் உறக்கத்தைப் புனிதக் காட்சிகளால் வேலி வளைத்தது.

ஈதனுக்காக உங்களை நான் பெரிதும் வாழ்த்துகின்றேன் ;

நீங்கள் மிகக் கொடுக்கின்றீர்கள்; ஆயினும் கொடுக்கின்றோமென்று உணர்வதேயில்லை.

மெய்யாகவே கூறுகின்றேன், தன்னையே கண்ணாடியில் கண்டுகொண்டிருக்கும் அன்பு கல்லாய்ச் சமைந்துவிடுகிறது.

கனிவுடைய சொற்களால் தன்னை விதந்து கொள்ளும் நற்பணியும் சாபத்தின் தந்தையாகிறது.

உங்களிற் சிலர் என்னை விலகி நிற்பவனென்றும், தனிமை வெறிபிடித்தவனென்றும் சொல்லியதுண்டு.

மேலும் சொன்னதுண்டு, "அவர் காட்டு மரங்களோடு மந்திராலோசனை செய்கின்றார், மனிதர்களோடன்று" என்று.

"அவர் மலையுச்சிமீது தனிமையிலிருக்கின்றார், நம் நகரை இகழ்ந்து நோக்குகின்றார்" என்று.

மெய்யே, நான் மலையுச்சிகள் மீது ஏறியதுண்டு ; தனித்த தொலைவுகளில் நடந்ததுண்டு.

மிக்க உயரத்திலோ நீண்ட தொலைவிலோ இருந்தன்றி நான் உங்களை எவ்வாறு கண்டிருக்க முடியும் ?

தொலைவிலிருந்தாலன்றி அருகில் இருப்பது எவ்வாறு?

உங்களில் மற்றுஞ் சிலர் என்னை விளித்தழைத்துச் சொல்லுவார், சொல்லின்றிச் சொல்லியே.

"அயலூராரே அயலூராரே எட்டா உச்சிகளை நச்சுபவரே, கழுகுகள் கூடுகட்டும் சேணுயர் வெற்புகளிடையே ஏன் வாழ்கின்றீர்?

"கிட்டாததை ஏன் தேடுகின்றீர்?

"எந்தப் புயல்களை உமது வலை வீச்சில் பிடிப்பீர்?

"எந்த மாயப்பறவைகளை வான வெளியில் வேட்டையாடுவீர்?

"வாரும், எங்களோடு ஒருவராக இரும்.

"இறங்கி வந்து எங்கள் உணவையுண்டு உமது பசி தீரும். எமது மதுவையுண்டு உமது தாகத்தைத் தணியும்."

அவர்கள் ஆன்மாவின் ஏகாந்தத்திலே இவ்வண்ணம் சொன்னார்கள்.

அவர்களுடைய ஏகாந்தம் இன்னும் ஆழ்ந்திருந்தாலோ, உணர்ந்திருப்பார்கள் நான் உங்கள் இன்பத்தையும் துன்பத்தையுமே தேடினேனென்று.

நான் வேட்டையாடியது வானத்தில் திரி கின்ற உங்கள் பேரான்மாக்களையே.

ஆனால் வேட்டையாடியவனே வேட்டையு மானான்.

ஏனெனில் என் வில்லைப் பிரிந்த அம்புகளிற் பல என் மார்பையே நாடி வருவவாயின.

எனவே பறப்பவனே நகர்பவனுமானான்.

எங்ஙனமெனில் என் சிறகுகள் கதிரொளி யில் பரந்தபோது அவற்றின் நிழல் நிலத்தில் ஒரு ஆமைபோலப் படர்ந்தது. நம்பிக்கை கொண்ட நானே ஐயம் கொண்டவனுமானேன்.

உங்கள்பால் நான் மேலும் நம்பிச்கை கொள் வதற்காக, உங்களை மேலும் அறிந்து கொள்வதற் காக என் விரலையே என் புண்ணினுள் பல்கால் விட்டுக் கொண்டிருக்கின்றேன்.

இந்த உறுதியோடும் இந்த ஞானத்தோடும் சொல்கின்றேன் :

உங்கள் உடலங்களுள்ளே நீங்கள் கட்டுண்ட வரல்ல; வீட்டுக்குள்ளே வயலுக்குள்ளே நீங்கள் சிறைப்பட்டவருமல்ல.

நீங்கள் எதுவோ அது மலைக்குமேல் வாழ் கின்றது : காற்றெடு உலாவுகின்றது.

சூட்டைநாடி வெயிலில் ஊர்ந்து வருவது மன்று; அல்லது பாதுகாப்பு கருதி இருளில் வளை பறிப்பதுமன்று.

அது சுதந்திரமானதொன்று; நிலத்தைச் சூழ்ந்து, வானில் இயங்கும் ஓர் சக்தி.

இவை தெளிவற்ற சொற்களாயின் தெளிவு படுத்த முயலவேண்டாம்.

தெளிவற்றதும் உருத்திரளாததும் ஆகவே எப்பொருளின் தொடக்கமும் அமைந்துள்ளது; ஆனால் இறுதியோ அவ்வாறன்று.

என்னையும் ஒரு தொடக்கமாக நீங்கள் நினைவு கூருங்கள்; அதுவே என் விருப்பம்.

வாழ்வன அனைத்தும் பனிப்படலச் சூழலிலே கருக்கொள்கின்றன, பளிங்கு நிலையிலன்று.

ஆயின் யாரறிவார், பளிங்கெனப்படுவது பனிப்படலத்தின் அழிவு நிலையே என்பதை.

என்னை நினைக்குங்கால் இதனையும் நினைக்க நான் வேண்டுகின்றேன் :

எது உங்கள்பால் தளர்ச்சியுற்றும் மயக்குற்றும் தோன்றுகின்றதோ, அதுவே வலுமிக்கதும், உறுதிப்பாடுடையதும் ஆகும்.

உங்கள் என்புக்கூட்டையமைத்துத் திண்மை யாக்கியது உங்கள் மென்மை மூச்சன்றோ?

உங்கள் நகரை அமைத்து அதனுள் இருப்பன அனைத்தையும் படைத்தது, இன்று நீங்கள் நினைவு கூராத ஒரு கனவினாலன்றோ ?

அந்த உயிர்ப்பின் அலைகளைமட்டும் நீங்கள் காணவல்லீரேல் மற்றெவற்றைக் காண்டலையும் ஒழிப்பீர்;

அக்கனவின் மெல்லொலியைக் கேட்க வல்லீரேல் வேறு எவ்வொலி கேட்கவும் விரும்பீர்.

ஆனால் நீங்கள் காண்பதுமில்லை, கேட்பதுமில்லை. அதுவும் நன்றே.

உங்கள் விழிகளை மறைக்கும் திரையை அதனை நெய்த கைகளே விலக்கும்.

உங்கள் செவிகளை அடைக்கும் களிமண்ணை அதனைப் பிசைந்த விரல்களே துளைக்கும்.

நீங்களும் காண்பீர்கள்.

நீங்களும் கேட்பீர்கள்.

ஆயினும் குருடாயிருந்தோமே யென்று வாடுகிலீர், செவிடாயிருந்தோமே யென்று வருந்துகிலீர்;

ஏனெனில் அந்த நாள் அனைத்துப் பொருளிலும் அகத்தே மறைந்திருக்கும் மெய்ப்பொருளை அறிவீர்.

பின்னே, இருளையும் வாழ்த்துவீர் ஒளியினை வாழ்த்துதல் போலவே.

இவ்வண்ணம் சொல்லி முடித்ததும் அவர் தன்னைச் சுற்ற நோக்கினார்.

தன் மரக்கலத்தின் மாலுமி சுக்கான் அருகே விரிந்து வளரும் பாய்களையும் நெடுந் தொலை வெளியையும் மாறி மாறிக் கூர்ந்து பார்த்தவண்ணமாய் நிற்பதைக் கண்டார்.

அவரும் சொல்லுவார்: பொறை, எல்லையற்ற பொறை, பூண்டவர் என் மரக்கலத்தின் தலைவர்.

காற்று வீசுகின்றது, கப்பற் பாய்கள் துடிக்கின்றன, சுக்கானுமே கட்டளையை இரந்துகொண்டிருக்கின்றது.

ஆயினும் என் கப்பல் தலைவர் பேச்சு முடிவுக்காக அமைதியுடன் காத்திருக்கின்றார். பெருங்கடலின் இசை கேட்டுள்ள இதோ நிற்கும் இந்த மாலுமிகளும் எனக்குப் பொறுமையுடன் செவி சாய்த்தார்கள்.

இனியும் அவர்களைக் காக்க வைத்தலாகாது.

நான் ஆயத்தமாய் விட்டேன்.

ஆறு கடலை அணைந்து விட்டது. மீண்டும் பேரன்னை தன் மகவை மார்போடு தழுவி நிற்கிறாள்.

ஆர்ப்பலீச மக்களே! விடைபெற்றுக் கொள்கின்றேன்.

இந்த நாளும் முடிவெய்தியது.

நீராம்பல், வருநாள் மீது கூம்பிக்கொள்வது போல் இந்நாளும் நம் மீது கூம்பியது.

நமக்கு இங்கே கொடுக்கப்பட்டதை நாம் கொண்டு நிற்போம்.

போதாதாயின் மீண்டும் நாம் ஒன்று சேர வேண்டும்; ஒன்ருய்க் கொடுப்போன்முன் நம் கைகளை நீட்டவேண்டும்.

திரும்பவும் நான் உங்களிடம் வருவேன் என்பதை மறக்காதீர்கள்.

இன்னும் ஒரு கணம், என் ஆசை மற்றுமோர் உடம்புக்கு வேண்டும் தூசும் நுரையும் திரட்டும்.

இன்னும் ஒரு கணம், காற்றிலே சற்று ஒய்வு, பின்னுமொரு பெண் என்னைச் சூல்கொள்வாள்

உங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன், உங்களோடு நான் வாழ்ந்த இளமையொடு விடைபெற்றுக்கொள்கிறேன்.

நேற்றுத்தான் நாம் ஒரு கனவினில் சந்தித்தோம்.

நீங்கள் எனது தனிமையில் எனக்கு இன்னிசை பொழிந்தீர்கள்.

நானும் உங்கள் ஆசைகளால் விண்ணிலொரு கோபுரம் கட்டினேன்.

ஆனால் இப்பொழுது நமது துயில் அகன்று விட்டது; நம் கனவு கலைந்துவிட்டது. காலைப் பொழுதும் கழிந்துவிட்டது.

நண்பகலும் வந்தெய்தியது; அரைவிழிப்பு கழிய ஒளிப்பகல் ஆயது. நாமும் பிரியவேண்டும்.

நினைவின் அந்திப்போதில் நாம் மீண்டும்கூட நேர்ந்தால், மீண்டும் ஒன்றாய் உரையாடுவோம்.

அப்பொழுது நீங்கள் இன்னும் உருக்கும் ஒரு பாடலை எனக்குப் பாடுவீர்கள்.

நமது கைகள் மேலுமொரு கனவிலே இணைய நேர்ந்தால் விண்ணிலே மேலுமொரு கோபுரம் கட்டி முடிப்போம்.

இங்ஙனமாய் உரைத்து மாலுமிகளுக்கு அவர் ஒரு குறி செய்தார். செய்யவே அவர்கள் நங்கூரம் மறித்துக் கப்பலைக் கட்டவிழ்த்துக் கீழ்த் திசை நோக்கி நகர்ந்தனர்.

ஒரே உள்ளத்திருந்து வருவதுபோல் கரை நின்ற மக்களிடையே பேரொலி ஒன்று பிறந்தது. அது மாலை வரையிலும் படர்ந்து கடல்மீதே பெரு

முரச ஒலியாய்ப் பரக்க எழுந்தது. அலமித்திரை ஒருத்தியே மரக்கலம் மஞ்சுப்படலத்தே மறைவது வரையும் கூர்ந்து நோக்கி மௌனமாய் இருந்தாள்.

மக்கள் திரள் முற்றக் கலைந்த பின்னரும் அவள் ஒருத்தியே கடற்சுவர்மீது அவர் சொன்ன வாசகத்தை நினைவு கூர நின்றாள்.

"இன்னும் ஒரு கணம், காற்றிலே சற்று ஓய்வு, பின்னுமொரு பெண் என்னைச் சூல் கொள்வாள்.'